விலை ரூபா 40
பக்கங்கள் - 12
# ஒருவன்
ORUVAN - ඔරුවන්
ஆண்டு: 01 இதழ் : 50 குரோதி வருடம் மார்கழி மாதம்
03 ஆம் திகதி புதன்கிழமை ஹிஜ்ரி 1446 ஜமாதுல் ஆகிரா 16 (18.12.2024)




## புத்தகயாவில் ஜனாதிபதி வழிபாடு





(தொடர்ச்சி...) 02

**மக்களின் வரிப்பணம்: ஓய்வுபெற்ற ஜனாதிபதிகளுக்கு ரூ.1448 மில்லியன் செலவு**

# பாதுகாப்பை குறைத்து மதிப்பீடு நடத்த திட்டம்

( ஆர்.மனோசங்கர் )

முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்பட்ட முப்படைகளையும் அடுத்தவாரத்தில் இருந்து குறைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொது பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்று தெரிவித்த அவர், ஆறு மாதங்களுக்கு ஒரு முறை மேற்கொள்ளப்படும் பாதுகாப்பு மதிப்பீட்டின் பிரகாரம் பாதுகாப்பு வழங்கப்ப டும் என குறிப்பிட்டுள்ளார்.



இதன்போது, முன்னாள் ஜனாதிபதிகளின் சார்பில் பாதுகாப்பு பணியில்ஈடுபடுத்தப்பட் டவர்களின் எண்ணிக்கை பற்றிய தகவல்க ளையும் அமைச்சர் வெளிப்படுத்தினார்.

இதன்படி, முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்புக்காக அரசாங்கத்தினால் பொது மக்களின் பணம் செலவிடப்படுவதாகவும், அந்த தொகை 1448 மில்லியன் ரூபா எனவும் தெரிவித்தார். "இன்றும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் பாதுகாப்பு மற்றும் ஏனைய கடமைகளுக்காக 60 பொலிஸ் உத்தியோக த்தர்களும் 228இராணுவ வீரர்களும் ஈடுபடு த்தப்பட்டு ள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு நான்கு இராணுவ அதிகாரிகளும் 60 பொலிஸ் அதிகாரிகளும் பாதுகா வலர்களாக உள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் பாதுகாப்பிற்காக 188 ஆயுதப் படை வீரர்களும், 22 பொலிஸாரும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

02

## ஜனாஸாக்கள் எரிப்பு: சபையில் சூடான தர்க்கம்

**விபரங்களை வெளியிடுமாறு ஹக்கீம் வலியுறுத்தல்**

(சுப்ரமணியம் நிஷாந்தன்)

கொவிட் தொற்றுநோய் பரவல் ஏற்பட்டிருந்த போது தகனம் செய்யப்பட்ட முஸ்லிம்களின் விபரங்களை வெளியிட வேண்டும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை வாய்மூல விடைக்கான கேள்வி (தொடர்ச்சி...)

02

**ஓர் இனத்தை இலக்குவைத்து நடந்த குரோத செயல் ..!**



**அதிகரிக்கும் மின் துண்டிப்புகள்**

## இ.மி.சபைக்கு இலாபம்: துன்பத்தில் மகாஜனங்கள்

(கனூஷியா புஷ்பகுமார்)

நாடளாவிய ரீதியில் மின் துண்டிப்புகள் அதிகரித்துள்ளதாக மின்சாரப் பாவனையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. 2024ஆம் ஆண்டின் ஜனவரி மாதம் தொடக்கம் ஜூன் மாதம் வரையில் மின்துண்டிப்புகள் வேகமாக அதிகரித்து வருவதாக மின்சாரப் பாவனைனயாளர்கள் சங்கத்தின் தேசிய செயலாளர் சஞ்சீவ தம்மிக்க தெரிவித்தார்.

இலங்கை மின்சார சபையின் தரவுகளின்படி,2023 ஆம் ஆண்டில் உரிய நேரத்தில் பணத்தை செலுத்தாமையினால் (தொடர்ச்சி...)

02



## புதிய சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன



பத்தாவது நாடாளுமன்றத்தின் இரண்டாவது புதிய சபாநாயகராக தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் விக்ரமரத்ன பதவிப்பிரமாணம் செய்து கொண்டார். நேற்று (17) நடைபெற்ற நாடாளுமன்ற (தொடர்ச்சி...)

02

## சஜித்தின் கல்வி தகைமை என்ன?

**நாடாளுமன்றத்தில் வெடித்த சர்ச்சை**

(சுப்ரமணியம் நிஷாந்தன்)

தமது கல்வித் தகைமை என்ன என்பது தொடர்பில் ஆளுங்கட்சியை சேர்ந்த அமைச்சர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் சபையில் நேற்று செவ்வாய்க்கிழமை எழுப்பிய கேள்விகளுக்கு இன்று புதன்கிழமை முழுமையான ஆணவங்களை முன்வைத்து (தொடர்ச்சி...)

02



## பதவி நீக்கப்பட்ட கொரிய ஜனாதிபதிக்கு நீதிமன்றம் காலக்கெடு



பதவி நீக்கம் செய்யப்பட்ட தென் கொரிய ஜனாதிபதி யூன் சுக் யோல் (Yoon Suk Yeol) தனது தோல்வியுற்ற இராணுவச் சட்ட முயற்சியை விசாரிக்க வார இறுதிக்குள் நீதிமன்றில் ஆஜராகுமாறு தென் கொரிய வழக்கறிஞர்கள் செவ்வாயன்று (17) உத்தரவிட்டனர். உத்தரவுக்கு இணங்கத் தவறினால் யூன் (தொடர்ச்சி...)

02

## காலாவதியான தடுப்பூசி: சப்.பல்கலை 7 மாணவர்கள் வைத்தியசாலையில் அனுமதி




சப்ரகமுவ பல்கலைக்கழக விவசாய பீடத்தின் இரண்டாம் வருட மாணவர்களுக்கு பல்கலைக்கழக மருத்துவ நிலையத்தினால் ஏற்றப்பட்ட ஊசியினால் 7 மாணவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். நேற்று (17) பிற்பகல் 6 மாணவிகளும் ஒரு மாணவனும் பெலிஹுல் ஓயா பிராந்திய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மூவர் மேலதிக சிகிச்சைக்காக பலாங்கொடை ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக சமனல வெவ பொலிஸார் தெரிவித்தனர். (தொடர்ச்சி...)

02

## புதிய சபாநாயகர் சுயாதீனமாக செயற்பட வேண்டும்



சட்டமன்றத்தின் உரிமைகளைப் பாதுகாத்துக் கொண்டு, மக்களுக்கு மேலும் உகந்த சேவையை வழங்குவதில் சபாநாயகருக்கு தனித்துவமான வகிபங்கு உண்டு. 225 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் தரமான (தொடர்ச்சி...)

02

## அர்ச்சுனா எம்பிக்கு யாழ்.போதனா வைத்தியசாலையினுள் செல்லத் தடை



( ஆர்.மனோசங்கர் )

நீதிமன்ற உத்தரவுக்கு அமைவாக நோயாளர் என்ற ரீதியில் தவிர வேறு எந்த காரணத்திற்காகவும் யாழ்.போதனா வைத்தியசாலைக்குள் பிரவேசிக்க நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனாவிற்கு அனுமதியில்லை என யாழ்.போதனா வைத்தியசாலையின் வைத்தியசாலை (தொடர்ச்சி...)

02

## சமஷ்டி தீர்வே தமிழரின் இலக்கு

**இலங்கை அரசுக்கு சர்வதேச நாடுகள் கடும் அழுத்தங்களை பிரயோகிக்க வேண்டும்**




"புதிய அரசமைப்பில் கூட்டாட்சி முறைமையிலான சமஷ்டி தீர்வே தமிழர்களுக்கு வேண்டும். அதுவே தமிழர்களின் இலக்கு. தமிழர்களின் இழப்புகளுக்கும்,வலிகளுக்கும், எதிர்பார்ப்புகளுக்கும் சமஷ்டி தீர்வே ஒரே வழி " என இலங்கைத் தமிழரசுக்கட்சியின் நாடாளுமன்றக் குழுவின் பேச்சாளரும் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற (தொடர்ச்சி...)

02




மட்டக்களப்பு திருகோணமலை பிரதான வீதியில் ஏறாவூர் – ஆறுமுகத்தான் குடியிருப்பு பிரதேசத்தில் நேற்று (17) அதிகாலை வேகமாக வந்த கார் ஒன்று மூடியிருந்த வர்த்தக நிலையத்தை உடைத்துக்கொண்டு உட்புகுந்ததனால் அக்கடைக்குள் நிறுத்தப்பட்டிருந்த வான் ஒன்றும் சேதமடைந்துள்ளதுடன் விபத்தை ஏற்படுத்திய காரும் சேதமடைந்தது.

( படங்கள்: நாஸர்)

## மக்களின் வரிப்பணம்...

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு 57 பொலிஸ் நரும் 60 இராணுவத்தினரும், சந்திரிக்கா பண்டாரநாயக்கவிற்கு 60 பொலிஸ் உத்தியோகத்தர்களும், ஹேமா பிரேமதாசவிற்கு 10 பொலிஸ் உத்தியோகத்தர்களும் தற்போது பாதுகாப்புக்காக கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இதன்போது, அமைச்சர் மேலும் கருத்து தெரிவிக்கையில், கடந்த பதினொன்றரை மாதங்களில் அரசாங்கம் முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்புக்காக 1448 மில்லியன் ரூபாவை செலவிட்டது தொடர்பான தகவலை வெளிப்படுத்தினார்.

"முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச உள்ளிட்டவர்களுக்கு ஆயுதப்படை, பொலிஸ் மற்றும் ஜனாதிபதி அலுவலகம் என்பன பாதுகாப்பு வழங்கியுள்ளன. அவருக்காக கடந்த பதினொன்றரை மாதங்களில் மாத்திரம் ஆயுதப் படைகளினால் 328 மில்லியன் ரூபாவும், பொலிஸ் திணைக்களம் 327 மில்லியன் ரூபாவையும் செலவிடப்பட்டது. ஜனாதிபதி செயலகம் சார்பில் 55 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. இதன்படி 11 மாதங்களுக்கு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவுக்கு 710 மில்லியன் ரூபா பணம் செலவழிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு 207 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. ஆயுதப் படை சார்பில் ஆறு மில்லியன் ரூபாவும், பொலிஸ் திணைக்களம் சார்பில் 185 மில்லியன் ரூபாவும், ஜனாதிபதி செயலகத்தினால் 16 மில்லியன் ரூபாவும் செலவிடப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவுக்காக ஆயுதப்படையினர் 258 மில்லியன் ரூபாவும், பொலிஸ் திணைக்களம் 39 மில்லியன் ரூபாவும், ஜனாதிபதி செயலகம் 10 மில்லியன் ரூபாவும் என மொத்தம் 307 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு முப்படையினர் சார்பில்19 மில்லியன் ரூபாவும், பொலிஸ் திணைக்களம் 60 மில்லியன் ரூபாவும், ஜனாதிபதி செயலகத்தில் இருந்து மூன்று மில்லியன் ரூபா என இந்த மூன்று மாதங்களுக்கு 82 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

இந்த பதினொன்றரை மாதங்களுக்குள் மக்களின் பணமான 1448 மில்லியன் ரூபாவை அரசாங்கம் இந்த ஓய்வுபெற்ற ஜனாதிபதிகளின் பாதுகாப்பிற்காக செலவிட்டுள்ளது. இது மிகவும் கடினமான சூழ்நிலை" என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

## காலாவதியான...

குறித்த பல்கலைக்கழகத்திலுள்ள மருத்துவ நிலையத்தினால் மாணவர்களுக்கு ஏற்றப்பட்ட இத்தடுப்பூசி இரண்டு மாத காலம் காலாவதியானவை என தெரியவந்துள்ளது. காலாவதியான தடுப்பூசிகளை செலுத்தியதன் காரணமாகவே குறித்த மாணவர்களுக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பெலிஹூல் ஓயா பிராந்திய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள மாணவர்களைப் பார்வையிடுவதற்காக அங்கு வந்த பல்கலைக்கழக பீடாதிபதியிடம் இது தொடர்பில் வினவப்பட்ட போது, சம்பவம் தொடர்பில் பல்கலைக்கழகத்தில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

# புத்தகயாவில் ஜனாதிபதி வழிபாடு

இந்தியாவுக்கு உத்தியோகப்பூர்வ சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நேற்று (17) அதிகாலை பீஹாரில் அமைந்துள்ள புகழ்பெற்ற புத்த கயாவின் மகாபோதி ஆலயத்துக்கு சென்று வழிபாட்டில் ஈடுபட்டார்.

பீகாரை சென்றடைந்த ஜனாதிபதியை, கயா விமான நிலையத்தில் வைத்து மூத்த அரசு அதிகாரிகள் வரவேற்றனர்.

அத்துடன், புத்த கயாவின் மகாபோதி ஆலய வளாகத்திற்குள் சென்ற ஜனாதிபதி அநுரவை பௌத்த பிக்குகள் அன்புடன் வரவேற்றனர்.

யுனெஸ்கோவின் உலகப் பாரம்பரியச் சின்னமாகவும் விளங்கும் மகாபோதி கோயில், புத்த மதத்தைப் பின்பற்றுபவர்களுக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. புத்தர் ஞானம் பெற்றதாகக் கூறப்படும் இடத்தைக் குறிக்கும் வகையில், புத்த கயாவில் உள்ள ஒரு பழங்கால புத்த கோவில் இதுவாகும்.

## பதவி நீக்கப்பட்ட...

கைது செய்யப்படுவார் என்று எச்சரிக்கப்பட்டதாகவும் தென்கொரியாவின் யோன்ஹாப் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

சனிக்கிழமையன்று (14) நாடாளுமன்றத்தால் குற்றஞ்சாட்டப்பட்டு பதவி நீக்கப்பட்ட யூன், இராணுவச் சட்ட முயற்சி தோல்வியடைந்த சிறிது நேரத்திலேயே, கிளர்ச்சியின் குற்றச்சாட்டில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

இது குறித்து சட்டத்தரணிகள் மற்றும் காவல்துறை, பாதுகாப்பு அமைச்சக அதிகாரிகள் மற்றும் ஊழல் தடுப்பு புலனாய்வாளர்களின் கூட்டுக் குழு விசாரணையில் ஈடுபட்டுள்ளது.

குற்றம் நிரூபிக்கப்பட்டால், யூனும் அவரது நெருங்கிய கூட்டாளிகளும் ஆயுள் தண்டனை அல்லது மரண தண்டனையை சந்திக்க நேரிடும்.

சிக்கலுக்கு உள்ளான யூன் இந்த வாரம் இருமுறை விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

ஞாயிற்றுக்கிழமை (15) ஒரு செய்தி வெளியீட்டில், கிளர்ச்சி குற்றச்சாட்டுகள் தொடர்பில் விசாரிக்க யூனை அழைத்ததாக அரசதரப்பு வெளிப்படுத்தியது. எனினும் இதற்கு அவர் இணங்கத் தவறிவிட்டார்.

இப்போது, வழக்கறிஞர்கள் விசாரணைக்காக எதிர்வரும் சனிக்கிழமைக்குள் முன்னிலையாகுமாறும், இணங்கத் தவறினால் பிடியாணை பிறப்பிக்கப்படும் என்றும் எச்சரித்துள்ளது.

இதற்கிடையில், நாட்டின் அரசியலமைப்பு நீதிமன்றம் திங்கட் கிழமை (16) அவரது பதவி நீக்கத்தை மறுபரிசீலனை செய்யத் தொடங்கியது.

மேலும் அவர் பதவியில் இருந்து நீக்கப்படுவதை உறுதிசெய்ய ஆறு மாதங்கள் (180 நாட்கள்) வரை கால அவகாசம் உள்ளது. நாடாளுமன்றத்தின் தீர்ப்பை நீதிமன்றம் உறுதி செய்தால், இரண்டு மாதங்களுக்குள் புதிய தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

தற்சமயம் இடைக்கால ஜனாதிபதியாக பிரதமர் ஹான் டக்-சூ பதவி வகித்து வருகிறார். அதேநேரம், விசாரணை நடைபெற்று வரும் நிலையில், பதவி நீக்கம் செய்யப்பட்ட ஜனாதிபதி பயணத் தடையின் கீழ் இருக்கிறார்.

டிசம்பர் 3 அன்று, யூன் ஒரு இராணுவச் சட்ட ஆணையை வெளியிட்டார், இது குறுகிய காலத்திற்கு மட்டுமே நீடித்தாலும், பல ஆண்டுகளில் நாட்டை அதன் ஆழ்ந்த அரசியல் கொந்தளிப்பில் ஆழ்த்தியது. இந்த நடவடிக்கை நாடு முழுவதும் பரவலான கண்டனத்தையும் வெகுஜன எதிர்ப்புகளையும் தூண்டியமை குறிப்பிடத்தக்கது.

## அதிகரிக்கும்...

970,933 மின் துண்டிப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சஞ்சீவ தம்மிக்க சுட்டிக்காட்டினார்.

இவ்வாண்டின் ஜனவரி மாதம் தொடக்கம் ஜூன் மாதம் வரையில் 628,286 மின் துண்டிப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதில் 505,949 வீடுகள், 8,579 தொழிற்சாலைகள், 2,090 வழிபாட்டுத் தலங்கள், 39 ஹோட்டல்கள், 359 பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் 111,276 கடைகள் மற்றும் ஏனையவை உள்ளடங்குவதாக அவர் தெரிவித்தார்.

கடந்த ஆண்டில் நாள் ஒன்றுக்கு 2,660 மின் துண்டிப்புகள் மேற்கொள்ளப்பட்டதாக தெரிவித்த அவர், இவ்வாண்டில் நாளொன்றுக்கு 3,443 மின் துண்டிப்புகள் மேற்கொள்ளப்படுவதாக சுட்டிக்காட்டினார்.

மேலும் கருத்து தெரிவித்த அவர், மின்சார சபையின் தரவுகளின்படி, அதிகரித்த மின் கட்டணம் காரணமாக கடந்த மாதங்களில் குறித்த தொகை நிலுவையில் இருந்தமையினால் செலுத்த முடியாமல் அநாதரவாக இருந்த மக்களுக்கு இந்நிலை ஏற்பட்டுள்ளது.

மின்சார சட்டத்தை மீறி அதிக இலாபம் ஈட்டிய மின்சார சபைக்கு இந்தக் கட்டணங்களை செலுத்த வாடிக்கையாளர்கள் தமது நகைகளை கூட அடமானம் வைக்க வேண்டிய நிலை உருவாகியுள்ளது.

இறுதியில், அடகு வைத்த தங்க நகைகளுக்கு வட்டி செலுத்த வேண்டிய நிலையும் உருவாகியது.இதனால் மின் வாடிக்கையாளர்கள் மிகவும் அநாதரவாகியுள்ளனர்" என மின்சார பாவனையாளர்கள் சங்கத்தின் தேசிய

## புதிய சபாநாயகர்...

அரச சேவையை வழங்குவதில் சபாநாயகரின் பாத்திரம் தனித்துவமானது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

சகல உறுப்பினர்களினதும் கருத்துக்களையும் முன்மொழிவுகளையும் வேறுபாடின்றி கேட்பதன் மூலம் ஜனநாயகத்தை வலுப்படுத்துவதில் முக்கிய பங்காளராக சபாநாயகர் மாறுகிறார். முன்னாள் சபாநாயகரைப் போன்று நடந்து கொள்ளாது பணியை சிறப்பாக முன்னெடுக்குமாறும், மீண்டும் சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை சமர்ப்பிக்க வேண்டிய தேவைப்பாடு ஏற்படாதவாறு நடந்து கொள்ளுமாறும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

## புதிய சபாநாயகர் ஜகத்...

பதவிக்காக ஜகத் விக்ரமரத்னவின் பெயரை பிரதமர் ஹரிணி அமரசூரிய முன்மொழிந்தார்.சபைத்தலைவர் பிமல் ரத்நாயக்க அதனை வழிமொழிந்தார்.

சபாநாயகர் பதவிக்காக எதிர்க்கட்சி பெயர் எதனையும் முன்மொழியவில்லை.

ஏற்கனவே 10வது நாடாளுமன்றத்தின் சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அசோக ரன்வல இராஜினாமா செய்ததையடுத்து, சபாநாயகர் பதவி வெற்றிடமாகி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

10வது நாடாளுமன்றத்தின் இரண்டாவது புதிய சபாநாயகராக தேர்ந்தெடுக்கப்பட்ட பொலநறுவை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான ஜகத் விக்ரமரத்ன அம் மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தி சார்பில் போட்டியிட்டு 51,391 விருப்பு வாக்குகளைப் பெற்று அந்த மாவட்டத்தின் விருப்பு வாக்கு பட்டியலில் இரண்டாவதாக தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

இந்நிலையில், புதிய சபாநாயகருக்கு வாழ்த்து தெரிவித்த பிரதமர் அமரசூரிய, புதிய அரசாங்கமானது மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்கான அர்ப்பணிப்பை நிறைவேற்றுவதையே மேற்படி நியமனம் பிரதிபலிப்பதாக கூறினார்.

அத்துடன் புதிதாக தெரிவான சபாநாயகருக்கு எதிர்க்கட்சி சார்பில் வாழ்த்துக்களை தெரிவித்த எதிர்க்கட்சியின் பிரதம கொறடா கயந்த கருணாதிலக்க,சபாநாயகர் தனது பொறுப்புகளை சரிவர செய்து நாடாளுமன்றத்தின் புதிய அரசியல் கலாசாரத்தை பாதுகாப்பார் என எதிர்பார்ப்பதாக நம்பிக்கை வெளியிட்டார் .

## சமஷ்டித் தீர்வே...

உறுப்பினருமான ஞானமுத்து ஸ்ரீநேசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

"தேசிய இனப்பிரச்சினைக்குக் கூட்டாட்சி முறைமையிலான சமஷ்டி அடிப்படையிலான தீர்வே ஒரே வழி. அந்தத் தீர்வையே வடக்கு கிழக்கில் உள்ள தமிழ் மக்கள் விரும்புகின்றார்கள்.

சமஷ்டி தீர்வை வேண்டியே வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு வாக்களித்தார்கள். எனவே, எமது மக்களின் விருப்பத்துக்கு மாறாகச் செயற்படமாட்டோம்.

புதிய அரசமைப்பில் ஒற்றையாட்சித் தீர்வை நாம் ஒருபோதும் ஏற்கமாட்டோம். மத்தியில் அதிகாரங்கள் குவிந்திருக்கும் இந்த ஒற்றையாட்சியால்தான் தமிழ் மக்கள் பேரவலங்களைச் சந்தித்தார்கள்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசு, புதிய அரசமைப்பை வரைவைத் தயாரிக்கும்போது எமது நிலைப்பாட்டை உதாசீனம் செய்ய முடியாது.

இந்தியா உள்ளிட்ட சர்வதேச நாடுகள், அரசியல் தீர்வு விடயத்தில் இலங்கை அரசுக்குக் கடும் அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டும்.

அபிவிருத்தியடைந்த பல நாடுகளில் கூட்டாட்சி (சமஷ்டி) முறைமை வெற்றியளித்துள்ளது.

எனவே, புதிய அரசமைப்பு ஊடாக இலங்கையிலும் இந்த முறைமை அமுலாக வேண்டும். அதிகாரங்கள் மீளப்பெற முடியாதவாறு பகிரப்பட வேண்டும். அப்போதுதான் இந்த நாட்டில் இனப்பிரச்சினை என்ற ஒன்று இல்லாமல் போகும்." ▯ என்றார்.

## அர்ச்சுனா எம்.பி.

பணிப்பாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குள் அத்துமீறி நுழைந்ததாக தெரிவித்து நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா மற்றும் சட்டத்தரணி கௌசல்யா ஆகியோருக்கு எதிராக யாழ்.நீதிவான் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டிருந்தது.

இந்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதையடுத்து இருவருக்கும் 100,000 ரூபா பெறுமதியான சரீரப் பிணை வழங்கப்பட்டதுடன், வழக்கு விசாரணைகள் எதிர்வரும் பெப்ரவரி 7ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இந்நிலையில், யாழ்.போதனா வைத்தியசாலைக்கு நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா செல்ல வேண்டுமெனில் வைத்தியசாலை நிர்வாகத்திடம் அவர் முன் அனுமதி பெற வேண்டும் எனவும் நீதிமன்றம் நிபந்தனை விதித்துள்ளது.

இந்த உத்தரவுக்கு இணங்க, வைத்தியசாலை நிர்வாகம், நோயாளியாக தவிர வேறு எந்த நோக்கத்திற்காகவும் வைத்தியசாலை வளாகத்திற்குள் நுழைய அனுமதிக்கப்பட மாட்டாது என அர்ச்சுனாவிடம் அறிவித்துள்ளது.

அத்துடன், உரிய அனுமதியின்றி வைத்தியசாலைக்குள் பிரவேசிக்க முற்பட்டால், நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனாவை யாழ்.பொலிஸாரிடம் ஒப்படைக்குமாறு வைத்தியசாலை நிர்வாகம் தனது பாதுகாப்பு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளது.

மேலும், இவ்வாறான சந்தர்ப்பத்தில் பலவந்தப்படுத்தல் அல்லது துன்புறுத்தலில் ஈடுபடாமல் நிலைமையைக் கையாளுமாறும் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## ஜனாஸாக்கள்...

நேரத்தில் சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸவிடம் எழுப்பிய கேள்வியின் போதே அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்தார். தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் பின்னால் ஒளிந்து கொள்ளாது கொவிட்-19 தொற்று நோயால் உயிரிழந்த மற்றும் தகனம் செய்யப்பட்ட முஸ்லிம்களின் விவரங்களை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறோம். இது வெளிப்படையாக விவாதிக்கப்பட வேண்டும் என ரவூப் ஹக்கீம் கோரிக்கை விடுத்ததுடன், அரசாங்கம் தகவல்களை மறைப்பதாகவும் குற்றம் சாட்டினார். இந்த சம்பவம் நாட்டின் சுகாதார அதிகாரிகளுக்கு பாரிய களங்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்றும் அவர் கூறினார்.

கடந்த அரசாங்கத்தின் இந்த தீர்மானத்தை கடுமையாக விமர்சித்த ரவூப் ஹக்கீம், இவ்வாறான தவறுகளை திருத்திக் கொள்வதற்காகவே புதிய அரசாங்கம் தெரிவு செய்யப்பட்டதாகவும் குறிப்பிட்டார்.

இந்த கேள்விக்கு பதிலளித்த சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ, "அரசாங்கம் எந்த வகையிலும் தகவல்களை மறைக்க முயற்சிக்கவில்லை. இது தகவல்களை மறைக்கும் பிரச்சினை அல்ல. இது மருத்துவ நெறிமுறைகள் பற்றியது.

தகவல் அறியும் சட்டத்தின் கீழ், நோயாளியின் விவரங்களை வெளியிடுவது அனுமதிக்கப்படாது. மேலும், இந்தத் தகவலை மறைக்க எங்களுக்கு உரிமை இல்லை. விஞ்ஞானபூர்வமான சான்றுகளின் அடிப்படையில் குறித்த அமைச்சரவை முடிவை அப்போதைய அரசாங்கம் எடுத்தது என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள். இந்த தகவல்களை வெளியிடுவதில் சில நெறிமுறை ரீதியான பிரச்சினை இருப்பதால்தான் வெளியிட வில்லை. மாறாக மறைப்பதற்கான தேவை எமது அரசாங்கத்துக்கு இல்லை " என்று அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ கூறினார்.

இதன் போது மீண்டும் கேள்வி எழுப்பிய ரவூப் ஹக்கீம், தகனம் செய்யப்பட்டவர்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் நெருங்கிய உறவினர்களது தகவல்களை வெளிப்படுத்துவதால் எவ்வித நெறிமுறை பிரச்சினையும் ஏற்படாது.இருப்பினும் இது ஒரு நெறிமுறை பிரச்சினை என அரசாங்கம் கூறுகிறது.அதில் என்ன நெறிமுறை பிரச்சினை உள்ளதென எமக்கு தெரியவில்லை.இது கடந்த அரசாங்கத்தின் தவறு என்பது உண்மைதான், ஆனால் இது எவ்வாறு நெறிமுறைப் பிரச்சினை என்பது எனக்குப் புரியவில்லை என்றார்.

இதேவேளை, இந்த தீர்மானத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் மற்றும் சமூகங்களுக்கு நட்டஈடு வழங்கப்பட வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இதன்போது வலியுறுத்தினார்.

எந்தவொரு தகவலையும் மறைக்க விரும்பவில்லை என்று மீண்டும் வலியுறுத்திய அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ, விவரங்களை வெளியிடுவது குறித்து சட்டமா அதிபருடன் கலந்தாலோசித்து இந்த விவகாரம் விவாதிக்கப்படும் என்று அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ கூறியதுடன், இத்தீர்மானம் குறித்து ஒரு நாடாக நாம் வெட்கப்பட வேண்டும் எனவும் கூறினார்.

இதனைத் தொடர்ந்து கடந்த அரசாங்கத்தின் தீர்மானம் முஸ்லிம் சமூகத்திற்கு பாரிய அநீதி இழைக்க வழிவகுத்ததாக அரசாங்க மற்றும் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் தமது கருத்துக்களை மாறி மாறி முன்வைத்தனர்.

சுகாதாரத் திணைக்களத்திற்குள் உத்தியோகபூர்வ விசாரணைகளை இது தொடர்பில் மேற்கொள்ள வேண்டும் என ரவூப் ஹக்கீம் அரசாங்கத்துக்கு அழைப்பு விடுத்துடன், கொவிட்-19 தகனங்கள் குறித்து ஆலோசித்த குழுவின் ஒரு பகுதியாக இருந்த சில அதிகாரிகள் இப்போதும் உயர் பதவிகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர் எனவும் குற்றம் சாட்டினார்.

இதுகுறித்து கருத்து வெளியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான், சுகாதார அமைச்சின் தற்போதைய செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள அனில் ஜயசிங்கவே அப்போதும் அமைச்சின் செயலாளராக பணியாற்றினார். இந்த தீர்மானத்தை எடுத்த குழுவின் முக்கிய உறுப்பினராக அவர் இருக்கிறார்.அவரை எவ்வாறு மீண்டும் இந்த பதவிக்கு நியமிக்க முடியும் என கேள்வியெழுப்பினார்.

இதற்கு பதில் அளித்த அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ, கடந்த அரசாங்கத்தின் காலத்தில் தீர்மானத்தை எடுத்தது யாரென தெரியும். அதிகாரிகள் கருத்துகள் எதனையும் அவர்கள் உள்வாங்காது எவ்வித விஞ்ஞானப்பூர்வமான தரவுகளும் இன்றியே குறித்த தீர்மானத்தை எடுத்தனர் என்றார்.

இதன்போது மீண்டும் குறுக்கிட்ட ரவூப் ஹக்கீம், குறைந்தது துறை ரீதியான விசாரணையாவது நடத்துங்கள்.அந்த நபர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என வலியுறுத்தினார்.

இறுதியாக அரசாங்கத்தின் சார்பில் பதில் அளித்த சபை முதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க, ஓர் இனத்தை இலக்குவைத்து நடந்த இந்த குரோதச் செயல் குறித்து நாம் வெட்கமடைய வேண்டும். சட்டமா அதிபர் திணைக்களம் வழங்கியுள்ள ஆலோசனைகளின் பிரகாரம் குறித்த தகவல்களை வழங்குவதில் சிக்கல்கள் இருப்பதாக அமைச்சர் பதில் அளித்துள்ளார். தகனம் செய்யப்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்குவதால் அவர்களது கவலைக்கு தீர்வு கிடைக்காதென நினைக்கிறோம். அவ்வாறு வழங்க வேண்டும் என கோரினால் அதில் எவ்வித பிரச்சினையும் இல்லை" என்றார்.

## சஜித்தின்...

பதில் அளிப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பதிலளித்தார்.

முன்னாள் சபாநாயகர் அசோக ரன்வலவின் கலாநிதிப் பட்டம் தொடர்பில் எழுந்த சர்ச்சை காரணமாக அவர் தமது பதவியை துறந்திருந்ததுடன், நேற்று புதிய சபாநாயகராக ஜகத் விக்ரமரத்ன தெரிவுசெய்யப்பட்டார்.

இந்த நிலையில், ஆளுங்கட்சியின் எம்.பிக்கள் சிலரின் கல்வித் தகைமை தொடர்பில் எதிர்க்கட்சியின் உறுப்பினர்கள் நேற்றைய அமர்வில் பல்வேறு கேள்விகளை எழுப்பினர்.

அதேபோன்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் கல்வித் தகைமை தொடர்பில் பல்வேறு சர்ச்சைகள் நிலவுவதால் லண்டனில் அவர் பெற்ற கல்வித் தகைமைகளை வெளிப்படுத்தினால் சர்ச்சைகளுக்கு முற்றுப்புள்ளியை வைக்க முடியும் என ஆளுங்கட்சியின் பிரதம கொறடாவும் சுகாதார அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ உட்பட ஆளுங்கட்சியின் சில உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

இதற்கு பதில் அளித்த சஜித் பிரேமதாச, நாளை (இன்று புதன்கிழமை) சகல ஆவணங்களுடனும் தமது கல்வித் தகைமை தொடர்பிலான தகவல்களை சபையில் முன்வைப்பதாக கூறினார்.








கொழும்பு -13, சாயி மத்திய நிலையத்தின் பௌர்ணமி தின பூஜையை முன்னிட்டு நேற்று முன்தினம் தத்தாத்ரேயர் சாயி பஜனை, சீரடி சாயி மங்கள ஆராத்தி என்பன இடம்பெற்றன. இதன்போது சாயி சேவையாக அரிமா சங்கம், புறக்கோட்டை 306டீ1, கிராண்ட்பாஸ் அரிமாசங்கம் என்பவற்றின் அனுசரணையில் 100 பயனாளிகளுக்கு மூக்கு கண்ணாடிகள் வழங்கப்பட்டன.

(படங்கள் : எஸ்.எம். சுரேந்திரன்)

இந்திய முன்னணி தொழில் முனைவோருடன்

# ஜனாதிபதி அநுர சந்திப்பு

## இலங்கையில் முதலீடுகள் தொடர்பில் விருப்பம் தெரிவிப்பு




மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இந்தியா சென்றுள்ள ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, புதுடில்லியில் இந்திய முன்னணி வர்த்தகப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார். இந்திய கைத்தொழில் சம்மேளத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த கலந்துரையாடலில் இந்தியாவின் முன்னணி தொழில் முனைவோர் கலந்து கொண்டனர்.

இலங்கையில் முதலீடு செய்வதற்கான சாதகமான சூழல் குறித்து விளக்கமளித்த ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, இலங்கையில் முதலீடு செய்யுமாறு இந்திய தொழில் முனைவோரிடம் கோரிக்கை விடுத்தார். இரு நாடுகளுக்கும் இடையிலான முதலீடு மற்றும் வர்த்தக உறவுகளை விரிவுபடுத்தும் நோக்கில் நடைபெற்ற இந்த கலந்துரையாடலில் டிஜிட்டல் பொருளாதாரம், சுற்றுலா, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் தகவல் தொழில்நுட்பம் ஆகிய துறைகள் குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டது.

இதன்படி, இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக நடவடிக்கைகளின் அடிப்படையில் இலங்கையில் முதலீட்டு வாய்ப்புகளை விஸ்தரிப்பது குறித்து கலந்துரையாடப்பட்டது.

இலங்கையில் முதலீட்டு வாய்ப்புகள் குறித்து கவனம் செலுத்த இந்திய முன்னணி வர்த்தகப் பிரதிநிதிகள் விருப்பம் தெரிவித்ததுடன், அதற்குத் தேவையான முதலீட்டு வசதிகளை வழங்க இலங்கை அரசாங்கம் உடன்பாடு தெரிவித்தது.

தொழில் அமைச்சரும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சருமான பேராசிரியர் அனில் ஜயந்த பெர்னாண்டோவும் இந்த சந்திப்பில் கருத்துத் தெரிவித்தார்.

இலங்கைத் திட்டமிடல் சேவை:

# முதலாம் வகுப்பிற்கான பதவி உயர்வு 04 வருடமாக இல்லை

(முகம்மட் முக்தார்)

இலங்கை திட்டமிடல் சேவையின் மூன்றாம் தரத்திற்கு திறந்த போட்டிப்பரீட்சை அடிப்படையில் 2008 ம் ஆண்டில் சேர்த்துக்கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு கடந்த நான்கு வருடங்களாக அச்சேவையின் முதலாம் தரத்திற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவால் பதவி உயர்வு வழங்கப்படவில்லையென கவலை தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை திட்டமிடல் சேவை பிரமாணக்குறிப்பின் அடிப்படையில் அச்சேவையில் 12 வருட சேவையை முடித்தவர்கள் முதலாம் வகுப்பிற்கு பதவி உயர்த்தப்பட வேண்டும். அதனடிப்படையில் 2008 ம் ஆண்டு நியமனம் பெற்றவர்கள் 2020 ம் ஆண்டு முதலாம் வகுப்பிற்கு பதவி உயர்வுக்கு தகுதி பெற்றும் இதுவரை அவர்கள் பதவி உயர்த்தப்படவில்லை.

2025 ம் ஆண்டு இவர்கள் இலங்கை திட்டமிடல் சேவையின் முதலாம் வகுப்பு விசேட தரத்திற்கு தகுதி அடைகின்றனர்.முதலாம் வகுப்புக்கு இவர்கள் பதவி உயர்த்தப்படாமையால் விசேட தர பதவி உயர்வையும் பெற முடியாத நிலையேற்பட்டுள்ளது .

இதன் காரணமாக 2008 ம் ஆண்டு இலங்கை திட்டமிடல் சேவைக்கு நியமனம் பெற்ற 162 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

2008 ம் ஆண்டு இலங்கை திட்டமிடல் சேவையின் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்ட ஒருவரால் தொடரப்பட்ட வழக்கின் காரணமாகவே இந்நிலைமை ஏற்பட்டுள்ளதாக அரசாங்க சேவை ஆணைக்குழு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

எவ்வாறாயினும் தமது பிரச்சினைகளுக்கு பொருத்தமான தீர்வை விரைவில் அரச சேவை ஆணைக்குழு எடுத்து தமக்கான பதவி உயர்வை வழங்க வேண்டுமென பாதிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் தெரிவிக்கின்றனர்.

## உங்கள் ராசிபலன் எப்படி

குரோதி வருடம் மார்கழி மாதம் 03ஆம் நாள் புதன்கிழமை

**மேஷம்** இன்று கடினமான நாளாக இருக்கும். உங்கள் பொறுமை இழப்பீர்கள்.

**ரிஷபம்** இன்று உற்சாகமான நாள். முக்கியமான முடிவுகள் எடுப்பதற்கு முயற்சி எடுக்கலாம்.

**மிதுனம்** இன்று சற்று மந்தமான உணர்வுகள் காணப்படும். அதனை தவிர்த்தல் நலம்.

**கடகம்** இன்று அதிக பொறுப்பும் பதட்டமும் காணப்படும். விவேகமான, முறையான அணுகுமுறை மேற்கொள்வது சிறந்தது.

**சிம்மம்** இன்று காணப்படும் சிறிய பிரச்சனைகளை கையாள கடின முயற்சி தேவை.

**கன்னி** இன்று அனைத்து விதத்திலும் முன்னேற்றம் காணப்படும். உங்களிடம் ஆற்றல் மற்றும் உறுதி காணப்படும்.

**துலாம்** உங்கள் செயல்களை சிறந்த முறையில் ஆற்றுவதற்கு உங்கள் திறமைகளை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

**விருச்சிகம்** உங்கள் செயல்களை முறையாக ஏற்பாடு செய்து ஒரு கட்டுப்பாட்டோடு செய்யுங்கள்.

**தனுசு** இன்று வெற்றி பெறுவதற்கு அதிக முயற்சி எடுக்க வேண்டும். திட்டமிடுதலும் முயற்சியும் இன்று மிகவும் தேவை.

**மகரம்** உங்களிடம் போதிய தைரியம் காணப்படும். உங்கள் முயற்சிகள் நல்ல பலன்களை அளிக்கும்.

**கும்பம்** இன்றைய நாளை உங்களின் சுய மேம்பாட்டிற்காக பயன்படுத்திக் கொள்ளலாம்.

**மீனம்** நீங்கள் கடினமான பணிகளையும் எளிதாக செய்வீர்கள் என்றாலும் சிறந்த முறையில் திட்டமிட வேண்டும்.

## இன்றைய பஞ்சாங்கம்

**திதி:** இன்று பிற்பகல் 12:54 வரை திரிதியை பின்பு சதுர்த்தி.
**நட்சத்திரம்:** இன்று அதிகாலை 03:31 புனர்பூசம் பின்பு பூசம்.
**யோகம்:** சித்த
**சந்திராஷ்டமம் நட்சத்திரம்:** கேட்டை.
**சூலம்:** வடக்கு.
**இராகு காலம்:** 12:00 PM முதல் 01:30 PM வரை.
**குளிகை:** 10:30 AM முதல் 12:00 PM வரை.
**எமகண்டம்:** 07:30 AM முதல் 09:00 AM வரை.

# சிலிண்டர் சின்ன கூட்டணியில் புரிந்துணர்வு ஒப்பந்தம் எதுவும் இல்லை

## தேசிய பட்டியல் சர்ச்சை குறித்து கஞ்சன விளக்கம்

(கனூஷியா புஷ்பகுமார்)



ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்ற தேர்தல்களில் சிலிண்டர் சின்னத்தில் போட்டியிட்ட ரணில் தலைமையிலான புதிய ஜனநாயக முன்னணி கூட்டணியில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கஞ்சன விஜேசேகர தெரிவித்தார். நாடாளுமன்றத் தேர்தலில் புதிய ஜனநாயக முன்னணி இரண்டு தேசிய பட்டியல் ஆசனங்களை வென்றது. இதில் சில கட்சிகள் ஒன்றிணைந்து போட்டியிட்டிருந்தாலும் அவர்களுக்குள் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படாமையே தேசியப் பட்டியல் ஆசனங்களுக்கு யாரை நியமிப்பது என்பதில் சர்ச்சைகள் எழக் காரணமாக அமைந்துள்ளது. பிரதான சிங்கள ஊடகமொன்றில் இடம்பெற்ற அரசியல் நிகழ்வில் கலந்துக்கொண்டு ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் சந்தர்ப்பத்திலேயே முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கஞ்சன விஜேசேகர இவ்வாறு பதிலளித்திருந்தார். புதிய ஜனநாயக முன்னணியின் தேசியப் பட்டியல் ஆசனத்திற்கு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கஞ்சன விஜேசேகரவை நியமிக்க வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் பரிந்துரைக்கப்பட்டிருந்த நிலையில் அதற்கு கூட்டணியின் எந்த கட்சியும் மறுப்பு தெரிவித்திருக்கவில்லை.

எனினும், அதன் தேசியப் பட்டியல் ஆசனத்திற்கு ரவிகருணாநாயக்க மற்றும் பைசர் முஸ்தபா ஆகியோரை நியமித்திருந்தாலும் யாரை நியமிப்பது என்பதில் பல இழுபறிகளும் நியமித்ததன் பின்னர் புதிய ஜனநாயக முன்னணியில் கூட்டணியமைத்துள்ள கட்சிகள் சில அதனை மறுத்திருந்தன. எதிர்பார்ப்புகளின் படி, கஞ்சன விஜேசேகர நியமிக்கப்படாமை தொடர்பில் குறித்த அரசியல் நிகழ்வில் அவரிடம் கேள்வியெழுப்பப்பட்டது. "ஜனாதிபதித் தேர்தல் நிறைவடைந்து இரண்டு வாரத்தில் நாங்கள் நாடாளுமன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்களை சமர்ப்பித்திருந்தோம். நாங்கள் யாரும் தேசியப் பட்டியலை எதிர்பார்த்து போட்டியிடவில்லை" எனக் கூறியிருந்தார். இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த அவர்,

"ஜனாதிபதித் தேர்தலில் ஒன்றாக இணைந்து போட்டியிட்ட குழு பிரிந்து வெவ்வேறாக தனியாக போட்டியிடுவதா அல்லது ஒரு கூட்டணியாக போட்டியிடுவதா என்பதே எங்களுடைய முதலாவது காரணியாக அமைந்திருந்தது.

ஒரு கூட்டணியாக போட்டியிட தீர்மானிக்கும் போது எங்களுக்கு மூன்று யோசனைகள் முன்மொழியப்பட்டன. அதில், முதலாவது ரணில் விக்கிரமசிங்க சார்பில் யானை சின்னத்தில் போட்டியிடுவது, இரண்டாவது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் கதிரை சின்னத்தில் போட்டியிடுவது, மூன்றாவதாக பொதுச் சின்னம் ஒன்றில் கூட்டணியாக போட்டியிடுவது அவையாகும்.

யானை சின்னத்தில் போட்டியிட பெரும்பாலானோர் விரும்பவில்லை. கதிரை சின்னத்தில் போட்டியிட ஐக்கிய தேசியக் கட்சியின் சிலர் விரும்பவில்லை. நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கிய பொதுச்சின்னம் சிலிண்டர் சின்னம் என்பதால் சிலிண்டர் சின்னத்தில் போட்டியிட தீர்மானித்தோம்.

கட்சியின் பொதுச்செயலாளர் என்ற அடிப்படையில் ஷியாமளி பெரேரா அவர் விரும்பிய இருவரின் பெயரை முன்வைத்துள்ளார். கட்சியின் பொதுச்செயலாளருக்கே தேசியப் பட்டியல் ஆசனங்களை நியமிக்க உரிமை உண்டு. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் இருந்து வந்து ஆதரவு தெரிவித்த உறுப்பினர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்பதே எங்களுடைய கருத்தாக இருந்தது.

எனது பெயரை தேசியப் பட்டியல் ஆசனத்திற்கு முன்மொழிந்த அனைவருக்கும் நன்றி தெரிவிக்க விரும்புகிறேன்" என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

# பார் பேமிட் வழங்க சிபார்சு செய்தவர்களும் சபாநாயகரைப் போல் பதவி விலக வேண்டும்

## முன்னாள் எம்.பி. சுமந்திரன் வலியுறுத்து

பார் பேமிட் வழங்குவதற்குச் சிபார்சு செய்தவர்களும் சபாநாயகர் பதவி விலகியது போன்று பதவி விலக வேண்டும் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். சபாநாயகர் பதவி விலகியமை தொடர்பில் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில், "சபாநாயகர் கலாநிதிப் பட்டம் தனக்கு இருப்பதாகவும் அதனை தற்போது நிரூபிக்க முடியாது என்பதால் பதவி விலகுவதாகவும் அறிவித்தார். அது நல்லதொரு விடயம். அதை நான் வரவேற்கின்றேன். இதேபோன்று மற்றவர்களும் ஏனைய விடயங்களுக்காக பதவி விலகுவார்களாக இருந்தால் அதுவும் நல்ல விடயம்தான்.

பார் பேமிட் எடுத்தவர்களும் தாமாகவே விலகுவார்களாக இருந்தால் அதுவும் நல்ல விடயம்.

விக்னேஸ்வரன் ஐயா தனது பார் பேமிட்டை கொடுத்து விட்டேன் எனத் தெரிவித்து அவர் தேர்தலில் போட்டியிடமால் கொழும்புக்குப் போய் விட்டார். ஒவ்வொரு இடங்களிலும் நிறையப் பார் பேமிட் கொடுக்கப் பட்டுள்ளது என்று அரசு அறிவித் துள்ளது.



அதைச் சிபார்சு செய்தவர்கள் யார் என்ற தகவல் இன்னும் வரவில்லை.

அந்தத் தகவல் வருகின்றபோது சிபார்சு செய்தவர்களும் சபாநாயகர் பதவி விலகியமை போன்று விலக வேண்டும். அதனைச் சந்தோஷமாக வரவேற்போம்." என்றார்.

# மியன்மார் கடத்தல் முகாம்; 27 பேர் நாடு திரும்பினர்

மியன்மாரில் செயற்படும் மனித கடத்தல் முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 27 இலங்கையர்கள் நேற்று முன்தினம் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

கட்டுநாயக்காவுக்கு அழைத்து வரப்பட்ட அவர்களை அதிகாரிகள் சிறப்பு பாதுகாப்பு ஏற்பாடுகளின் கீழ் அவர்களின் வீடுகளுக்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

மனித கடத்தல் வலையமைப்புகளுடன் தொடர்புடைய சட்டவிரோத இணையக் குற்ற நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களிடம் சிக்கியிருந்த நிலையிலேயே குறித்த இலங்கையர்கள் மீட்கப்பட்டுள்ளனர். அழைத்துவரப்பட்ட 27 பேரில் எட்டு யுவதிகளும் அடங்குகின்றனர். இதேவேளை இன்னும் 14 இலங்கையர்கள் மியன்மாரில் செயற்படும் சைபர் குற்ற முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. முன்னதாக 2024 நவம்பர் 1 முதல் மியன்மாரில் உள்ள கடத்தல் முகாம்களிலிருந்து இதுவரை 63 இலங்கையர்கள் நாடு திரும்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

"ஜனாதிபதி அன்பளிப்பு"

# சமூக ஊடகங்களில் பரவும் செய்திகள் போலியானவை

## அரசாங்க தகவல் திணைக்களம் எச்சரிக்கை

(எஸ்.டொரின்)

"ஜனாதிபதி அன்பளிப்பு " எனும் பெயரிலான தலைப்பில் அரசாங்கத்தின் உதவி வேலைத்திட்டம் தொடர்பில் போலி செய்தியொன்று தற்போது சமூக ஊடகங்கள் வாயிலாகப் பரவிவருவது அவதானிக்கப்பட்டுள்ளதாகவும் மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு குறித்த செய்தியுடன் லிங்க் ஒன்றும் இணைக்கப்பட்டுள்ளமையும் கண்டறியப்பட்டுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் நேற்று முன்தினம் (16) தெரிவித்தது. அரசாங்க தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள விசேட அறிக்கையிலேயே இது தொடர்பில் விபரிக்கப்பட்டுள்ளது. மேலும்,

குறித்த செய்தி முற்றிலும் பொய்யானது எனவும் அரசாங்கம் இவ்வாறான வேலைத்திட்டங்கள் தொடர்பில் தீர்மானம் எடுத்திருந்தால், அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் பொதுமக்கள் மற்றும் ஊடகங்களுக்குக் குறித்த முடிவுகளை அரசாங்கம் தெரிவிப்பது செயன்முறையாக உள்ளது. அரசாங்கத்தினால் அறிவித்தல் செய்யப்பட்ட அரச கொள்கை மற்றும் முடிவுகளை திரிபு படுத்தி இவ்வாறான பொய்யான செய்திகளைப் பிரசாரம் செய்ய வேண்டாம் என சமூக ஊடக செயற்பாட்டாளர்களிடம் கேட்டுக்கொள்வதாகவும் அடிப்படையற்ற பொய்யான செய்திகளை ஏற்றுக்கொள்ளுதல் மற்றும் பரிமாறிக்கொள்வதிலிருந்து பொதுமக்கள் தவிர்த்துக் கொள்ளுமாறும் அரசாங்க தகவல் திணைக்களம் கோரியுள்ளது.

## ஒருவனின் நோக்கில்...

No. 752/5, Dr Danister De Silva Mawatha,
Second Floor, Bellatrix Building, Colombo 09
0114701510 / editorial@oruvan.com


# அவசர மருந்து இறக்குமதி நாட்டுக்குப் பெருங்கேடு

பண்டிகை காலம் துவங்கி விட்டாலே விலை அதிகரிப்பும் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படுவதும் வழக்கமாகிவிடும். அப்பாவி பொதுமக்களை கேடயமாக வைத்து வர்த்தக பெரும்புள்ளிகள் நடத்துகின்ற நவீன சுரண்டல் முறை தான் இது.

பண்டிகை காலம் என்பது இலங்கை மக்களின் உயிர் துடிப்பான மாதம். என்றாலும், மகிழ்ச்சியும் வேதனையும் நிறைந்த மாதம் என்று கூட இதனை சொல்லலாம். மூன்று நேரம் பசியாற ஹோட்டல்களையும் சிற்றுண்டி சாலைகளையும் நம்பி இருக்கின்ற, தினக்கூலிகள், நெருப்பை அள்ளி தலையில் கொட்டும் அளவுக்கு துடிதுடித்துப் போகிறார்கள்.

காலை சிற்றுண்டிக்குச் சென்றால் ஒரு விலை, நண்பகல் உணவுக்கு சென்றால் இன்னும் அதிகரித்த விலை, இராப் போசனத்துக்கு சென்றால் அதை விடவும் அதிகரித்த விலை.

அதிர்ச்சி தரும் இந்த விலை அதிகரிப்புகள், உணவுப் பொருட்களில் மாத்திரமல்ல, மருந்து பொருட்களிலும் கிடுகிடு விலையேற்றம் நடந்த வண்ணமே இருக்கின்றன.

மக்களின் அன்றாட வாழ்வோடு கலந்துவிட்ட மருந்து பொருட்களும் இன்று மிக மிக அத்தியாவசிய பொருட்கள் ஆகிவிட்டன. இறக்குமதி செய்யப்படும் மருந்துகளின் விலைகள் அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்படுகின்றன. என்றாலும், திட்டமிட்ட சில மாபியாக்களின் செயல்பாடுகளால் மருந்துகள் பதுக்கப்பட்டு, செயற்கை விலையேற்றம் செய்யப்படுவதும் வழமையாகிவிட்டது. அப்பாவி மக்களின் பசியோடு மட்டுமல்ல, உயிரோடு விளையாடும், முதலாளித்துவத்தின் அராஜகமும் உச்சம் பெற்ற நிலையில் தான் இருக்கின்றன.

இலங்கை பயன்பாட்டில், கூடுதலான மருந்துகள் இறக்குமதி செய்யப்பட்டே வருகின்றன. இவைகளில் 75 வீதமான மருந்து வகைகள் இந்தியாவில் இருந்துதான் தருவிக்கப்பட்டு வருகின்றன. அரசாங்க மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் ( எஸ். பி. சி ) என்ற அரசாங்க நிறுவனம் மாத்திரமே, இலங்கையில், சிறு சிறு மருந்து உற்பத்திகளில் மாத்திரம் ஈடுபட்டு வருகிறது. அதாவது, மருந்து தேவைகளுக்கு வெளிநாடுகளை கையேந்தியே நாம் இன்னும் நிற்கின்றோம். தொடர்ச்சியாக ஆட்சியில் இருந்து வந்த அரசாங்கங்கள், வீணான செலவுகளை அதிகரித்து வந்ததே ஒழிய, ஆக்கபூர்வமான மருந்து உற்பத்திகளில் ஈடுபடவில்லை என்பது கவலையான வரலாறு.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்பு உரிமைகளை பேணுவதற்காக, கோடிக்கணக்கான ரூபாய்களை நாடு தியாகம் செய்தே வந்திருக்கிறது. ஆயினும், உயிர் காக்கும் மருந்துகளை உற்பத்தி செய்வதற்கு களம் அமைக்காமல், திராணியற்ற நிலையில், நாடு இருக்கின்றது என்பது கவலைக்குரியது.

இந்தியாவிலிருந்து தான் கூடுதலான மருந்துகள் இறக்குமதி செய்யப்படுகின்றது என்பதை நாம் ஏற்கனவே பார்த்தோம். இந்த மருந்துகள் அனைத்துமே, தரமானவைகளாக இருக்கின்றனவா? அல்லது நாட்டுக்குப் பொருத்தமானவையாக இருக்கின்றதா என்பதை கூட நாம் சரியாக அறிந்து கொள்வதில்லை.

இந்தியாவில் நடத்தப்பட்ட, ஆய்வொன்றின் அறிக்கை பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது. இந்தியாவில் உற்பத்தி செய்யப்படுகின்ற மருந்து வகைகளின் மாதிரிகள், அண்மையில் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன. இந்த ஆய்வை நடத்தி இருப்பது இந்திய அரசாங்கம். இந்தியா முழுவதும் உற்பத்தி செய்யப்படுகின்ற வெளிநாட்டு நிறுவனங்களின் மருந்து வகைகளின் ஒரு லட்சத்து ஆறாயிரத்து 150 மருந்து வகைகளின் மாதிரிகள் அரசாங்கத்தினால் பகுப்பாய்வு செய்யப்பட்டன. இவைகளில் சுமார் 3000 மருந்து வகைகள் தரக்குறைவானவை என அறிவிக்கப்பட்டுள்ளது. அதேநேரம், 282 மருந்து வகைகள் போலியானவை என ஆய்வறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இந்திய அரசாங்கம், இந்தப் போலி மருந்து உற்பத்தி நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுத்ததோ..? இல்லையோ..? தெரியவில்லை. ஆனால், முழுக்க முழுக்க இந்தியாவை நம்பி இருக்கின்ற இலங்கைக்கு விடுக்கப்பட்டிருக்கும் எச்சரிக்கையாகவே இதனை பார்க்க முடிகின்றது.

இலங்கை பாரிய பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்ட கால கட்டத்தில், இந்தியாவில் இருந்து, அவசர அவசரமாக மருந்துகள் இறக்கப்பட்டன. இவைகளில் பெரும்பாலானவை தரக்குறைவான மருந்துகள் என்று தெரிய வந்தது. தரக்குறைவான மருந்துகளால், இலங்கையில் கூடுதலான உயிரிழப்புக்கள் ஏற்பட்டதோடு, பலர் பார்வை இழந்தார்கள்.

கண் நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, கண்ணில் ஊற்றிய சொட்டு மருந்துகள், அப்பாவி பொதுமக்கள் பலரின் பார்வையை இழக்க செய்தன. இவ்வாறான போலி மருந்துகளால், நுவரெலியா, ஹட்டன் பிரதேசத்தில் பார்வையை இழந்த பலர் இன்னும், உண்மை சாட்சியங்களாக இருக்கின்றார்கள். இலங்கையில் தலைவிரித் தாடுகின்ற, ஊழல் மோசடிகளின் அறுவடை தான் இது.

கூடுதல் தரகு பணத்தை பெறுவதற்காக, தரமற்ற மருந்துகள் இறக்குமதி செய்யப்பட்டிருப்பது நிருபணம் ஆகிவிட்டது. அவசரத் தேவையாக காட்டி அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்ட பின்பே இந்தியாவிலிருந்து இலங்கைக்கு மருந்துகள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன.

தரமற்ற மருந்துகள் இறக்குமதி செய்யப்பட்டு இருக்கின்றன என்ற குற்றச்சாட்டின் பேரில், அப்போதைய அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல உட்பட பலர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்கள்.

அதேநேரம், அமைச்சரவை கூட்டுப் பொறுப்பில் இருந்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் பிரதமர் தினேஷ் குணவர்த்தன, முன்னாள் அமைச்சர் டிறான் அலஸ் ஆகியோரை சி ஐ டி விசாரணைக்கு அழைத்துள்ளது. தரக்குறைவான மருந்துகளை இறக்குமதி செய்தார்கள் என்பதுதான் இவர்கள் மீதான குற்றச்சாட்டு. விசாரணைகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதில், நாமும் உறுதியாக நிற்கின்றோம்.

ஆனால், அவசர அவசரமாக மருந்துகள் இறக்குமதி செய்யப்படும் பொழுது, விழிப்போடு இருக்க வேண்டும். தவறினால் நம் சந்ததியே பாதிக்கும்.



# 2024 நாடாளுமன்றம்

# இலங்கை அரசியலின் மாற்றங்கள்

## ஓர் ஒப்பீட்டுப் பார்வை

இலங்கையின் அரசியல் தளம் பல வருடங்களாக ஓரிரு அரசியல் கட்சிகளையே பற்றிக் கொண்டிருந்தது. அதனை முறியடிக்கும் விதமாக இந்த வருடம் ஜனாதிபதி தேர்தல் மற்றும் நாடாளுமன்ற தேர்தலும் அமையப்பெற்று உள்ளது. இவை அனைத்தும் கடந்த காலத்தில் இலங்கை மக்கள் மீது விழுந்த பேரடியாக உள்ளது என்றால் அது மிகையாகாது. இலங்கை அரசியலின் வரலாற்றுப் பின்னணி மக்களின் வெறுப்பும், எதிர்ப்புகளும் மக்களுக்கு புதிதாக அறிமுகமான அரசியல் இயக்கங்கள், சர்வதேச நெருக்கடிகளினால் உள்நாட்டில் ஏற்பட்ட பாதிப்புகள் மற்றும் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண குழப்ப நிலைகள் என பல சந்தர்ப்பங்களினை அடுக்கிக் கொண்டே செல்லலாம்.

இலங்கை ஐரோப்பியர்களின் வசம் இருந்து 1505 ஆம் ஆண்டு தொடங்கி 1948 ஆம் ஆண்டு பிரித்தானியர்களிடமிருந்து சுதந்திரம் அடைந்தது வரை எமக்கென்று முழுமையான ஈடுபாடு உடைய அரசியல் இல்லை. இதனைத் தொடர்ந்து இன்றளவிலும் கூட சர்வதேச நாடுகளின் மறைமுக அரசியலிலே இலங்கை உள்ளது. கடந்த ஆண்டுகளிலிருந்து மக்களின் விழிப்புப் பார்வை நாடு முழுவதும் ஒரே தன்மையானதாக காணப்படுகின்றது. இது ஒரு கட்சியை ஊக்கப்படுத்தும் தன்மையா? அல்லது நாட்டின் எதிர்காலம் நலம் பெற வேண்டும் என்று எதிர்பார்ப்புடைய வாய்ப்பளித்தலா? என விளங்கவில்லை.

2022 இல் எமது நாட்டின் காலி முகத்திடலில் நிகழ்ந்த மாபெரும் மக்களின் ஒன்று கூடல் நாட்டின் பொதுமக்களுக்கும் அரசியலுக்குமான உறவினை மாற்றியமைத்துள்ளது. அதனைத் தொடர்ந்து "அரகலய" இயக்கம் மற்றும் சில சமூக அமைப்புகளும் புதிய அரசியல் முனைவுகளுக்கு வழிவகுத்தன. இவ்வாறான குழப்பு நிலைமையுடன் சர்வதேச ரீதியில் நாட்டின் கடன் சுமை காலம் அறிந்திடாத அளவு 50 பில்லியன் டொலரை விட அதிகரித்து உச்சக்கட்டத்தை தொட்டது. இதன்போது சீனா மற்றும் அமெரிக்காவின் அதிகாரபூர்வ உறவுகள் மற்றும் கடன் ஒப்பந்தங்கள் இங்கு முக்கிய பங்கு வகித்தன. இவை அனைத்தும் மக்களின் நிலைப்பாட்டை வெகுவாக பாதித்ததனாலே மக்கள் புதிய அரசியல் கட்சியின் வெளிப்பாட்டை பெற்றனர். ஆனால் இதுவும் இலங்கை அரசியல் வரலாற்றின் ஒரு புதிய திருப்பமாக அமைந்துள்ளது.

> சீனா மற்றும் அமெரிக்காவின் அதிகாரபூர்வ உறவுகள் மற்றும் கடன் ஒப்பந்தங்கள் இங்கு முக்கிய பங்கு வகித்தன. இவை அனைத்தும் மக்களின் நிலைப்பாட்டை வெகுவாக பாதித்ததனாலே மக்கள் புதிய அரசியல் கட்சியின் வெளிப்பாட்டை பெற்றனர்

இன்றைய அரசியல் நிலைப்பாடு காலம் கடந்த சில மாறுதல்களை கொண்டுள்ளது. பாலியல் ரீதியான பாகுபாட்டினை தவிர்க்கும் வகையில் 20% பெண்களின் அரசியல் பங்களிப்பு வளர்ச்சி அடைந்துள்ளது. இது எதிர்காலத்தில் மாற்றமடைய கூடும் என்பது படித்த சமூகத்தவர்களின் எதிர்பார்ப்பாக உள்ளது மேலும் பல ஆண்டுக்குப் பிறகு பிரதமர் பதவியில் படித்த, பட்டம் பெற்ற பெண் ஒருவர் அமர்த்தப்பட்டுள்ளார். இது ஜெனரேஷன் Z மற்றும் இளம் தலைமுறையின் அரசியல் மாற்றங்களோடு இணைந்த சிந்தனையின் மாபெரும் வெளிப்பாட்டை எடுத்துக் கூறுகிறது.

இளம் தலைமுறையினரின் அரசியல் வாழ்க்கை நடைமுறை அரசியலுடன் துவக்கம் பெறுகிறது. இது இலங்கை அரசியலில் கடும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது பொதுமக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது எனலாம். குறிப்பாக 150 க்கும் மேற்பட்ட புதிய எம்பிக்கள் நாடாளுமன்றில் உள்வாங்கப்பட்டுள்ளனர். இலங்கையின் வரலாற்றில் 1977 ஆம் ஆண்டிற்கு பிறகு தனிப்பெரும்பான்மையை பெற்ற முதலாவது தேர்தல் கட்சியாக தேசிய மக்கள் சக்தி (NPP) உள்ளது. 159 ஆசனங்களை இலங்கை முழுவதுமாக வென்றுள்ளது. யாழ்ப்பாண மாவட்டத்தில் இதுவரை தமிழ் தேசிய கூட்டமைப்பு அதிக ஆசனங்களை பெற்று வந்தது ஆனால் இம்முறை தேசிய மக்கள் சக்தி கட்சி 3/6 ஆசனங்களை பெற்று வெற்றி ஈட்டிய முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும். இதுவே ஆளும் கட்சியின் மிகப்பெரிய வெற்றியாக கருதுகின்றனர். மேலும் விருப்பு வாக்குகள் பட்டியலில் கம்பஹா மாவட்டத்தில் போட்டியிட்ட விஜித ஹேரத் அவர்கள் 716,715 விறுப்பு வாக்குகளை பெற்று இதுவரையில் அதிக விருப்பு வாக்குகளை பெற்ற வேட்பாளராக திகழ்கின்றார். உண்மையில் தேசிய மக்கள் சக்தியின் ஆரம்ப காலம் 3 சதவீத வாக்குகளாக காணப்பட்டு இன்று ஆளுங்கட்சியாகவே வந்தமை மாபெரும் வெற்றி என கருதினாலும் இவை அனைத்தும் மக்களது வாக்கு என்பதனை நினைவில் வைத்து செயல்படுவர் என்பது சாத்தியப்பட வேண்டும்.

இதுவரையான காலங்களில் மலையக மக்களின் வாக்கு தொண்டமான் குடும்பத்தினருக்கே பெரும்பாலும் அளிக்கப்பட்ட நிலையில் இம்முறை நாடாளுமன்ற தேர்தலின் மாற்றம் இல்லை மாபெரும் மாற்றம் என்றே கூற வேண்டும். அண்மைக்காலத்தில் மலையக அரசியல்வாதிகளின் செயற்பாடுகளே இதற்கு முக்கிய காரணமாக உள்ளன. மேலும் மலையக தேயிலைத் தோட்ட தொழிலாளர்களின் பல நாள் போராட்டமாக உள்ள வேலைக்கேற்ற கூலிக்கான தீர்வினை பெறும் முயற்சியில் பலகால தோல்வி என்பன துணைக் காரணமாக உள்ளது. ஆயினும்கூட இலங்கை தொழிலாளர் காங்கிரசிற்கென உள்ள அதிவிசுவாசிகள் சிலரின் வாக்கெடுப்பில் நுவரெலிய மாவட்டத்தின் ஊடாக ஒரு ஆசனத்தினால் ஜீவன் தொண்டமான் நாடாளுமன்றில் நுழைய வாய்ப்பு பெற்றது. இது அம்மக்களின் எதிர்கால அரசியல் பார்வை கணிப்பா? அல்லது நாட்டு மக்களின் ஒன்றிணைப்பா? எனத் தெரியவில்லை.

இலங்கை அரசியலில் முதல்முறையாக ஒரு திருநங்கை தேர்தலில் போட்டியிட்டமை இம்முறையே இடம் பெற்றது. கேகாலை மாவட்டத்தில் சோசலிச கட்சியின் சார்பாக சானு நிமேஷா என்ற 49 வயதான திருநங்கை ஒருவர் போட்டிட்டு இலங்கையில் உள்ள 22 மில்லியன் மக்கள் தொகையிலும் 1% வாழ்ந்து கொண்டிருக்கும் திருநர் சமூகத்தை பெருமிதம்படுத்தியமை குறிப்பிடத்தக்கது. இலங்கை வரலாற்றில் ஒரு மாற்றுத்திறனாளி உள்வாங்கப்பட்டுள்ளது முதன்முறை ஆகும். சுகத் டி சில்வா அவர்கள் முதல் பார்வையற்றவராக 2024 ஆம் ஆண்டு நாடாளுமன்றில் தேசிய பட்டியலின் மூலம் தேசிய மக்கள் சக்தி கட்சி(NPP) சார்பாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவை எல்லாவற்றையும் பார்க்கும்போது கடந்த கால அரசியல்வாதிகள் குறைந்தது சட்டம் மற்றும் அடிப்படைக் கல்வியை கொண்டவர்களாக காணப்பட்டாலுமே கூட தற்கால அரசியல்வாதிகள் நவீன கல்வி, தொழில்நுட்ப தகுதிகளை கொண்டவர்களாக உள்ளனர். நாட்டின் ஜனாதிபதி,பிரதமர், பொதுத்துறை நிர்வாகம் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சர்,அரசியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சர் உள்ளிட்ட பலரும் படித்து துறை சார்ந்த தகுதிகளை உடையவர்களாகவும் பொருத்தமான அமைச்சுகளை பெற்றுள்ளமையும் தொழில் முறை திறனுடனான நிர்வாகம் உருவாக வாய்ப்பு உள்ளமையை எடுத்துக்காட்டுகிறது.

மேற்படியான மாற்றங்கள் மக்களின் ஒன்று கூடிய வாக்களிப்புகள் என்பன எதிர்காலத்தில் எத்தகைய சாத்தியமான வாய்ப்புகளைத் தரும் என்பது கேள்விக்குறியே. இருப்பினும் இவர்கள் மீது பொதுமக்களின் நம்பிக்கை பொய்த்து விடாது என்பது பலரின் அவாவாக உள்ளது. எதுவாயினும் மக்களின் ஒற்றை விரலில் மாற்றி அமைக்கப்படும் என்பது நிச்சயம். ■







இரா. தினேஷா நிஷாமலி
ஊடகக் கற்கைகள் துறை மாணவி, யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

## கடைகளை வழங்குவதில் வாக்குறுதி மீறல்

# வர்த்தகர்கள், பொதுமக்கள் போராட்டம்; கேள்விக் கோரல் ஒத்திவைப்பு







(பு.கஜிந்தன்)

சாவகச்சேரி நகர சபையால் அண்மையில் கட்டப்பட்ட புதிய கடைகளை வழங்குவதில் வாக்குறுதியை மீறி கேள்வி கோரப்பட்டுள்ளதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும், விண்ணப்பதாரி நகராட்சி மன்ற எல்லைக்குள் வசிக்க வேண்டும் என்ற நிபந்தனையை உள்ளடக்க வேண்டும் எனக்கோரி வர்த்தகர்களும், பொதுமக்களும் யாழ்ப்பாணம் – சாவகச்சேரி நகரசபை முன்றலில் நேற்று (17) போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சாவகச்சேரி நகர சபையால் அண்மையில் கட்டப்பட்ட புதிய கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்காக பகிரங்கமாக கேள்வி கோரப்பட்டுள்ளது. கடைகளைக் கட்ட ஆரம்பிக்கும்போது 2000 ஆம் ஆண்டு யுத்தத்தில் கடைகள் அழிவடைந்த வர்த்தகர்களுக்கு புதிய கடைத் தொகுதியில் முன்னுரிமை வழங்கப்படும் என நகர சபையால் உத்தரவாதமளிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், குறித்த வாக்குறுதியை மீறிப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது போராட்டக்காரர்கள் நகரசபையின் பிரதான நுழைவாயிலைப் பூட்டி போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இதனையடுத்து அங்கு வந்த சாவகச்சேரி பொலிஸார் பூட்டை உடைத்து அகற்றியதோடு போராட்டக்காரர்களைக் கலைக்க முற்பட்டனர். இதனால் நுழைவாயிலில் அமர்ந்தவாறு அவர்கள் தமது போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இத்தருணத்தில் நகரசபை வாகனங்களுக்குப் பொறுப்பான அதிகாரி கழிவகற்றும் உழவியந்திரத்தால் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது மோத முயற்சித்ததோடு அதை வீடியோ எடுத்த ஊடகவியலாளரையும் கடுமையாக அச்சுறுத்தினார். இதனால் அங்கு கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.

இதேவேளை, குறித்த கேள்வி கோரலை இரு வாரங்களுக்கு ஒத்திவைக்குமாறு உள்ளூராட்சி ஆணையாளர் அறிவித்துள்ளார்.

# யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்களால் சமூக நலத்திட்டம்



(பு.கஜிந்தன்)

யாழ். பல்கலைக்கழகக் கலைப்பீட மாணவர் ஒன்றியத்தால் நேற்று முன்தினம் (16) திங்கட்கிழமை யாழ்ப்பாண மாநகரசபை சுத்திகரிப்பு உத்தியோகத்தர்கள் 44 பேருக்கான பாதுகாப்புக் காலணிகளும், 10 மேற்பார்வையாளர்களுக்கான பாதுகாப்புத் தலைக்கவசங்களும் வழங்கிவைக்கப்பட்டன.

இந்த பொருட்கள் அனைத்தும் லண்டனில் வசிக்கும் கனகசபாபதி விநாயகமூர்த்தி என்பவரால் அன்பளிப்பாகக் கலைப்பீட மாணவர் ஒன்றியம் ஊடாக வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி நிகழ்வில் கலைப்பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராம், யாழ்ப்பாண மாநகர சபை ஆணையாளர், யாழ்ப்பாண மாநகரசபை பொறியியலாளர், யாழ் மாநகரசபை உத்தியோகத்தர்கள் , கலைப்பீட மாணவர்கள், கலைப்பீட மாணவர் ஒன்றியத்தினர் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# வாகனத்தில் மோதுண்ட யானை





(கி.வசந்தன்)

செட்டிகுளம் – மன்னார் வீதியில் கூலர் வாகனத்துடன் மோதுண்ட யானை ஒன்று காயமடைந்த நிலையில் வீதியருகில் விழுந்து கிடந்தது.

நேற்று அதிகாலை இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, செட்டிகுளம் – மன்னார் வீதியில் உள்ள பெரியகட்டுப் பகுதியில் வீதியில் நின்ற யானை ஒன்றுடன் மன்னாரில் இருந்து மதவாச்சி நோக்கி மீன்களை ஏற்றி அவ் வீதியால் வந்த கூலர் ரக வாகனம் மோதி விபத்துக்குள்ளானது. கூலர் வாகனம் கடுமையாக சேதமடைந்துள்ளதுடன் அதில் பயணித்த ஒருவரும் காயமடைந்துள்ளார்.

விபத்தில் காயமடைந்த யானை வீதியோரத்தில் உள்ள நீர் உள்ள குழி ஒன்றில் காயத்துடன் விழுந்து கிடந்து உயிருக்கு போராடுகிறது.

குறித்த சம்பவம் தொடர்பில் வனஜீவராசிகள் திணைக்களத்திற்கு பொது மக்களால் தகவல் வழங்கப்பட்டுள்ள நிலையில் வனஜீவராசிகள் திணைக்களத்தால் யானைக்கு சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறது. இவ் விபத்து தொடர்பான விசாரணைகளை செட்டிகுளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# இரணைமடுச்சந்தியில் யுவதி கடத்தல்

கிளிநொச்சி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட, இரணைமடுச் சந்தி கனகாம்பிகைக்குளம் வீதியில் வைத்து 26 வயதுடைய இளம் பெண்ணொருவர் நேற்று முன்தினம் (16) பி.ப 6 மணியளவில் கடத்தப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் புன்னாலைக்கட்டுவான் பகுதியைச் சேர்ந்த குறித்த யுவதி, கிளிநொச்சியில் உள்ள அழகுக்கலை நிலையம் ஒன்றில் பயிற்சி பெற்று வரும் நிலையில், கனகாம்பிகைக்குளம் பகுதியில் உள்ள வாடகை வீடு ஒன்றில் தங்கியிருந்துள்ளார்.

இந்த நிலையில் வழமை போன்று குறித்த யுவதி கற்கைநெறியை முடித்துவிட்டு, தான் தங்கியிருக்கும் இடத்துக்கு திரும்புகையில் வான் ஒன்றில் வந்த குழுவினர் அந்தப் பெண்ணை கடத்திச் சென்றுள்ளதாக ஆரம்பக் கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.



குறித்த யுவதியின் கைப்பை மற்றும் தொலைப்பேசி ஆகியன கண்டெடுக்கப்பட்ட நிலையில் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து சம்பவ இடத்துக்குச் சென்ற தலைமைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சரத் சமரவிக்ரம தலைமையிலான பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

யுவதியைக் கடத்திச் சென்றவர் யாழ்ப்பாணம் புன்னாலைக்கட்டுவன் பகுதியைச் சேர்ந்தவர் என்றும், அவர் யுவதியின் முன்னாள் காதலன் என்றும் தெரியவருகிறது. அவர் யுவதியை, யாழ்ப்பாணம் – புன்னாலைக்கட்டுவன் பகுதிக்கு கடத்திச் சென்றுள்ளார்.

கடத்திச் செல்லப்பட்ட யுவதி திருமணத்துக்கு மறுப்பு தெரிவித்ததால், யுவதியின் நண்பியை அழைத்த அந்தக் குழு யுவதியை, நண்பியிடம் பாரப்படுத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளது. இந்நிலையில் அந்த நண்பி குறித்த யுவதியை கிளிநொச்சி பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்றுள்ளார். மருத்து பரிசோதனைக்காக அந்த யுவதி வைத்தியசாலையில் சேர்ப்பிக்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் குறித்து கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# சுன்னாகம் தனியார் நிறுவனத்திற்கு மின்சாரம் வழங்கல்

## மாவட்ட அபிவிருத்தி கூட்டத்தில் காரசாரம்



யாழ்ப்பாணம் சுன்னாகப் பகுதியில் தனியார் நிறுவனம் ஒன்றுக்கு வழங்கப்பட உள்ள உயர் மின்னழுத்த மின்சாரம் இலங்கை மின்சார சபை சட்ட விதிகளுக்கு அமைவாகவே மேற்கொள்ளப்படுவதாக இலங்கை மின்சார சபையின் உயர் அதிகாரி தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்தி கலந்துரையாடலின் போது குறித்த விவகாரம் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனாவின் கேள்விக்குப் பதில் அளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

குறித்த தனியார் நிறுவனம் தமது தொழில் துறை ஒன்றை ஆரம்பிப்பதற்கு உயர் மின்னழுத்த மின்சாரத்தைப் பெறுவதற்காக இலங்கை மின்சார சபையிடம் விண்ணப்பித்தது. அதன் பிரகாரம் அப்போது மக்களின் 80 வீதமானவர்களின் கையெழுத்துடன் உரிய ஆவணங்களைப் பரிசோதித்தே அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆனால் சில நபர்கள் தனிப்பட்ட காரணங்களுக்காக மின் இணைப்பை வழங்குவதற்கு இடையூறு விளைவிக்கிறார்கள் என்றார்.

இதன்போது குறுக்கிட்ட பாராளுமன்ற உறுப்பினர்,

குறித்த நிறுவனத்திற்கு மின்சார இணைப்பு வழங்கும் கம்பங்கள் அந்தப் பகுதியின் பிரதேச சபையின் அனுமதியில்லாமலா நாட்டியுள்ளனர் என வினவினார். இதன்போது கருத்துத் தெரிவித்த மின்சார சபை உயர் அதிகாரி,

மின்சார சபை 2009 31A பிரிவின்படி பிரதேச சபையின் அனுமதியைத் தாண்டி பொது வீதியில் மின் இணைப்பை வழங்க முடியும். அது பற்றிய பிரதேச சபையின் அனுமதி தேவையில்லை.

வேண்டுமானால் எமது மின் இணைப்பு விவகாரத்தை சட்டரீதியாக யாரும் சவாலுக்கு உட்படுத்தப்பட முடியும் என்றார்.

இந்நிலையில் குறித்த விவகாரம் தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினர்களுடன் கலந்துரையாடி இரண்டு கிழமைக்குள் அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுவுக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என ஒருங்கிணைப்புக் குழு தலைவர் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்தார்.

குறித்த வீதியால் உயர் மின்னழுத்த மின்சார இணைப்பு வழங்கியதற்கு அப்பகுதி மக்கள் சிலர் எதிர்ப்பு வெளியிட்டிருந்தனர்.

# முதியவர் திடீர் மரணம்

(பு.கஜிந்தன்)

தனியார் பஸ்ஸில் சுழிபுரத்தில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த பயணி ஒருவர் வாயிலிருந்து நுரை வெளிவந்த நிலையில் நேற்று முன்தினம் திடீரென உயிரிழந்துள்ளார். சுழிபுரம் மேற்கு, சுழிபுரம் பகுதியைச் சேர்ந்த இளையதம்பி சிவசுப்பிரமணியம் (வயது 71) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

இந்த நபர் நேற்று முன்தினம் காலை 10.30 மணி அளவில் 782 வழித்தட பஸ்ஸில், சுழிபுரத்தில் இருந்து பயணத்தை மேற்கொண்டார். இதன்போது அவருக்கு இடைவழியில் வாயிலிருந்து நுரை வெளிவந்தது. பின்னர் தனியார் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு, அங்கிருந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். இருப்பினும் அவர் உயிரிழந்து விட்டதாக மருத்துவர்கள் தெரிவித்தனர். சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். மாரடைப்பு காரணமாக மரணம் சம்பவித்துள்ளதாகப் பிரேதப் பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பணம் மோசடியில் ஈடுபட்டவர் கைது

யாழ்ப்பாணம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் நேற்று முன்தினம், 26 இலட்சம் ரூபா பணத்தினை மோசடி செய்த சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கு அமைவாக இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. இவர் யாழ்ப்பாணத்தில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடும் பிரதான வர்த்தகர் எனத் தெரிவிக்கப்படுகிறது. நீதிமன்றத்தில் முற்படுத்தியவேளை அவரை எதிர்வரும் 18ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

# ஆளுநர் அலுவலகத்தில் தகவல் அறியும் உரிமை சட்டப் படிவம் வழங்குவதில்லை

வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் படிவங்களை நாம் வழங்குவதில்லை என ஆளுநர் அலுவலக நிர்வாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது, நேற்று ஆளுநர் அலுவலகத்திற்கு தகவல் அறியும் உரிமை சட்டத்தின் மூலம் தகவல்களை பெறுவதற்காக ஊடகவியலாளர்கள் சென்ற பொழுது அங்கே தகவல் அறியும் உரிமை சட்டத்திற்கான விண்ணப்பப்படிவம் வழங்கப்படுவதில்லை என அலுவலகத்தில் கடமையாற்றும் அதிகாரி தெரிவித்தார்.

தொடர்ந்து தகவல் உத்தியோகத்தர் உள்ளாரா என கேட்ட பொழுது நிர்வாக உத்தியோகத்தர் ஒருவரிடம் கதைப்பதற்கு குறித்த அதிகாரி அனுமதி வழங்கினார். குறித்த அதிகாரியிடம் படிவத்தை வினவிய பொழுது தகவல் அறியும் உரிமை சட்ட படிவம் இணையதளத்தில் உள்ளது நாம் வழங்குவதில்லை என தெரிவித்தார்.

## அதிகாரிகள் தெரிவிப்பு

இந்நிலையில் அவ்வாறு வழங்கக் கூடாது என ஏதும் சட்டதிட்டங்கள் உள்ளதா? என வினவிய பொழுது தகவல் அறியும் உரிமை சட்டம் தகவலை பொறுப்பான அதிகாரி வெளியில் இருந்து வருவதனால் எம்மால் வழங்கப்படுவதில்லை என தெரிவித்தார்.

இதனை தொடர்ந்து ஆளுநரை தொடர்பு கொள்ள முயற்சித்த பொழுதும் தொடர்பு கொள்ள முடியவில்லை.

# சாரணர் பேடன் பவல் விருது பெற்ற கணேசலிங்கம் யதுகணேஷ்

(கி.வசந்தன்)



திரி சாரணர் பிரிவில் சாரணர் பேடன் பவல் விருதைப் பெற்றுக் கொண்ட வவுனியாவைச் சேர்ந்த 2 ஆவது நபராக வரலாற்றில் கணேசலிங்கம் யதுகணேஷ் இடம் பிடித்துள்ளார். 11 வருடங்களின் பின் இந்த சாதனையை அவர் செய்துள்ளார். இலங்கை சாரணர் சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தினால் வழங்கப்படும் திரி சாரணர் பிரிவின் உயர் விருதான பேடன்பவல் விருதினை வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய பழைய மாணவனும், பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடப் பட்டதாரியும், தற்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தற்காலிகப் பயிற்றுவிப்பாளருமான யதுகணேஷ் பெற்றுக்கொண்டார். வவுனியாவிற்கு முதலாவது பேடன்பவல் விருதானது 2013ம் ஆண்டு சுந்தரலிங்கம் காண்டீபனுக்கு கிடைக்கப்பெற்று 11 வருடங்களுக்குப் பின்பு, இரண்டாவது பேடன்பவல் விருது நேற்று முன்தினம் கணேசலிங்கம் யதுகணேஷிற்கு கிடைக்கப்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஒருவன் HEALTH GOALS சுகவாழ்வுக்கோர் வழி


எஸ்.டொரின்

# இளம் வயதினரையும் தாக்கும் மூட்டுவலி



மூட்டுவலி என்பது எலும்புகள் இணையுமிடத்தில் உண்டாகும் வலி என கூறலாம்.

விரல்களை மடக்கமுடியாதது மற்றும் கை கால்கலை நீட்டமுடியாதது. இதன் அறிகுறிகளாக இருக்கும். மற்ற அறிக்குறிகள் மூட்டுக்கள் சிவத்தல், வீக்கம் போன்றவை. மேலும் இந்த நோயால் மேலும் சில உறுப்புக்களும் பாதிக்கப்படலாம் என வைத்தியர்கள் கூறுகின்றார்கள்.

ஆனால், இன்றைய காலகட்டத்தில் இளம் வயதினரையும் மிகவும் கடுமையாக மூட்டுவலி சார்ந்த நோய்கள் தாக்குவதாக ஆய்வுகளில் இருந்து தெரியவந்துள்ளமை.

முழங்கால் மூட்டுவலியின் அறிகுறிகள் யாவை?

ஒவ்வொரு நபரும் வெவ்வேறு முழங்கால் மூட்டுவலி அறிகுறிகளை அனுபவிக்கலாம்.

பொதுவான அடையாளங்கள் மற்றும் அறிகுறிகள் பின்வருமாறு:

- வீக்கம்
- விறைப்பு
- முழங்கால் மென்மை
- கால் நகரும் போது வலி
- முழங்கால் மூட்டில் ஒரு வெளிப்படையான குறைபாடு
- வரையறுக்கப்பட்ட இயக்கம்
- க்ரெபிடஸ், அசைவின் போது முழங்கால் மூட்டில் உறுத்தும் அல்லது கிளிக் என்ற ஒலியை ஏற்படுத்தும்
- முழங்கால் மூட்டில் பலவீனம்
- நிலையற்ற முழங்கால்

மூட்டுவலியில் பல வகைகள் உள்ளன. அவற்றில் சில முழங்காலில் நிகழ்கின்றன, அவற்றில் பின்வருவன அடங்கும்:

ஆஸ்டியோ ஆர்த்ரிடிஸ். இது முழங்காலை பாதிக்கும் மிகவும் பொதுவான வகை மூட்டுவலி ஆகும். மூட்டு குருத்தெலும்பு எனப்படும் முழங்கால் மூட்டைச் சுற்றியுள்ள பாதுகாப்பு குருத்தெலும்பு உடையத் தொடங்கும் போது இது ஏற்படுகிறது. இது நிகழும்போது, முழங்கால் மூட்டு எலும்புகள் ஒன்றுடன் ஒன்று உராய்ந்து, வலியை ஏற்படுத்துகிறது. மூட்டு குருத்தெலும்பு தாடை எலும்பு (தொடையின் மேற்புறம்), பட்டெல்லா (முழங்கால் தொடை) மற்றும் தொடை எலும்பு (தொடை எலும்பின் அடிப்பகுதி) ஆகியவற்றை உள்ளடக்கியது.

ஒஸ்டியோ ஆர்த்ரைடிஸின் ஆரம்ப கட்டங்களில், குறிப்பிட்ட நடவடிக்கைகளின் போது மட்டுமே வலியை உணரலாம்.

ஆஸ்டியோ ஆர்த்ரைடிஸ் முன்னேறும்போது, வழக்கமான செயல்பாடுகளைச் செய்யும்போது வலியை உணரலாம்.

### ரூமட்டாய்டு ஆர்த்ரைடிஸ்

ரூமட்டாய்டு ஆர்த்ரைடிஸ் (RA) என்பது ஒரு தன்னுடல் தாக்க நோயாகும். இதில் உடல் அதன் ஆரோக்கியமான செல்களைத் தாக்கத் தொடங்குகிறது. இது மூட்டுகளில் வீக்கத்தை ஏற்படுத்துகிறது. இது வீக்கம், விறைப்பு, வெப்பம் மற்றும் தீவிர வலிக்கு வழிவகுக்கும். சிகிச்சையளிக்கப்படாவிட்டால், சுய முழங்கால்களுக்கு நிரந்தர சேதத்தை ஏற்படுத்தும்.

இந்த வகை மூட்டுவலி எப்போதும் மூட்டுகளை சமச்சீராக பாதிக்கிறது. முழங்கால்களில் ஒன்று பாதிக்கப்பட்டால், மற்றொன்றும் பாதிக்கப்பட வாய்ப்புள்ளது. ரூமட்டாய்டு ஆர்த்ரைடிஸின் அறிகுறிகள் கைகள் மற்றும் மணிக்கட்டுகளிலும் தோன்றும்.

### கீல்வாதம்.

முழங்கால் மூட்டில் மோனோசோடியம் யூரேட் படிகங்கள் என்றும் அழைக்கப்படும் யூரிக் அமில படிகங்கள் உருவாகும் ஒரு வகை அழற்சி தான் இந்த கீல்வாதம். இந்த படிகங்கள் முழங்கால் மூட்டின் மென்மையான திசுக்களில் சேகரிக்கப்பட்டு கடுமையான வலி, வீக்கம் மற்றும் சிவத்தல் ஆகியவற்றை ஏற்படுத்துகின்றன.






# அலற்சி ஏற்பட மன அழுத்தம் பிரதான காரணமாகலாம்!



பொதுவான புரிதலின்படி, அழற்சி என்பது ஒரு எரிச்சலூட்டும் அல்லது உடலின் நோயெதிர்ப்பு மண்டலத்தின் எதிர்வினையாகும். கிருமிகள், வைரஸ்கள் உள்ளிட்ட ஏதேனும் ஒரு பிரச்சினையாக இருக்கலாம். இதன் அறிகுறிகளில் சிவத்தல், வெப்பம், வீக்கம் அல்லது வலி ஆகியவை அடங்கும். இருப்பினும், வீக்கம் நாள்பட்ட உடல்நலப் பிரச்சினைகளையும் ஏற்படுத்தும்.

### அலட்சிக்கு மனஅழுத்தம் எவ்வாறு சம்பந்தப்படுகின்றது

பொதுவாக அழற்சி பிரச்சினைகளுக்கு மன அழுத்தம் முக்கிய காரணியாக சுட்டிக் காட்டப்படுகிறது. வேலையால் ஏற்படும் மன அழுத்தங்கள் உள்ளிட்ட எந்த வடிவத்தில் மன அழுத்தம் ஏற்பட்டாலும் அது பிரச்சினை தான். இதனை நீங்கள் சரியாக கண்டுணர்ந்து கொள்வது அவசியம். மன அழுத்தம் ஏற்பட்டாலே வாழ்க்கை முறையும் மாறிவிடும்.



### மாசு

அடிப்படையில், மாசுபடுத்திகள் நாம் சுவாசிக்கும் காற்று மற்றும் நாம் குடிக்கும் நீர் உட்பட எங்கும் இருக்கலாம், இது நிறைய அழற்சியை ஏற்படுத்துகிறது. இதில் நீங்கள் கவனமாக இருப்பது அவசியம்.

### தொற்றுகள்

நோய்த்தொற்றுகள் ஒட்டுண்ணிகள், நோய்க்கிருமிகள், வைரஸ் தொற்றுகள், பக்டீரியா தொற்றுகள் மற்றும் உடலில் உள்ள பூஞ்சை தொற்று ஆகியவற்றிலிருந்து இருக்கலாம், இவை அனைத்தும் அழற்சிக்கு வழிவகுக்கும்.

### நாள்பட்ட நோய்

நீங்கள் ஏற்கனவே வகை 2 நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம் அல்லது சில வகையான மூட்டுவலியால் பாதிக்கப்பட்டிருந்தால், உங்கள் உடல் ஏற்கனவே வீக்கத்தை எதிர்கொள்கிறது.

# வயது வரம்பு இன்றி அனைவருக்கும் கேஸ்ட்ரிக் ஏன்?



வயிற்றில் இருக்கும் இரைப்பை சுரப்பி அளவுக்கு அதிகமான அமிலத்தை சுரக்கும்போது அசிடிட்டி ஏற்படுகிறது.

இரைப்பையில் அதிக அமிலம் இருந்தால், வாயு உருவாக்கப்படுதல், வாய் துர்நாற்றம், வயிற்று வலி மற்றும் பிற அறிகுறிகள் தென்படும்.

கேஸ்ட்ரிடிஸ் அறிகுறிகள் நீண்ட காலமாக இருந்துவந்தால்,அல்லது கடுமையானதாக இருந்தால், அதற்கு உரிய மருத்துவ சிகிச்சையைப் பெறுவது அவசியமாகும்.

சில நேரம் வீட்டு வைத்தியம், அறிகுறிகளுக்கு நிவாரணம் தராமல் போகலாம். அப்போது உடனடியாக மருத்துவ உதவியை நாட வேண்டும்.

இரத்த வாந்தி அல்லது இரத்தம் கலந்த மலம் போன்ற மோசமான அறிகுறிகளுக்கு முறையான சிகிச்சை தேவை. இவை மிகவும் தீவிரமான உடல்நல சிக்கலின் அறிகுறியாக இருக்கலாம்.

### இரைப்பை பிரச்சினையை நிரந்தரமாகத் தவிர்ப்பது எப்படி?

போதிய அளவு நீர்ச்சத்தினை உடலில் தக்கவைப்பதன் மூலமாகவும், மது அல்லது கார்பனேட் செய்யப்பட்ட பானங்களை தவிர்ப்பதன் மூலமாகவும், வாயுவை தூண்டக்கூடிய உணவுகளைக் கட்டுப்படுத்துவது, செயற்கை இனிப்புகளை உட்கொள்ளாமல் இருப்பது, மெதுவாக சாப்பிடுவது, புகைபிடிப்பதை நிறுத்துவது மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கை முறையைப் பின்பற்றுவது ஆகியவற்றின் மூலமாகவும் இரைப்பை பிரச்சினைகள் ஏற்படாமல் தவிர்க்கலாம்.

### ‘கேஸ்ட்ரிக்’ பிரச்சினைக்கு சிறந்த தீர்வு எது?

எலுமிச்சை சாறு மற்றும் வெதுவெதுப்பான நீரினை உட்கொண்டு போதுமான நீர்ச்சத்தினை பெறுவத் இவை மட்டுமில்லாமல் கேஸ்ட்ரிடிஸ் மோசமாக இருந்தால் மருந்தகத்தில் கிடைக்கும் மருந்துகள் உடனடி நிவாரணம் தரலாம். நாள்பட்ட இரைப்பை பிரச்சினைகளின் அறிகுறிகளை குணப்படுத்த மருத்துவ உதவி அவசியமாகும்.

# படர்தாமரை ஏன் ஏற்படுகின்றது?



அதிகமான வியர்வை, இறுக்கமான ஆடைகளை அணிவது, நோய் தொற்றால் பாதிக்கப்பட்டவரின் சோப், டவல் போன்றவற்றைப் பயன்படுத்துவது, நீண்ட நேரமாக தண்ணீரில் இருப்பது போன்றவை படர்தாமரை ஏற்படுவதற்கான காரணங்கள்.

சருமத்தின் மேல் பகுதியில் பரவக்கூடிய ஒரு வகையான டெர்மடோஃபைட் (Dermatophyte) கிருமியால் உருவாகக்கூடிய நோய் இது.

ஆரம்பத்தில் சிறு சிவப்புப் புள்ளியாக வட்ட வடிவில் இருந்தாலும் வேகமாகப் பரவக்கூடிய இயல்பு கொண்டது. இதன் ஓரங்களில் சிறிய செதில்கள் காணப்படும். ஓரங்கள் தடித்தும் இருக்கலாம். தொற்றின் வீரியம் அதிகரிக்கும்போது சிறிய சீழ் கொப்புளங்களும் காணப்படலாம்.

படர்தாமரையானது தொடை, பிறப்புறுப்பு, அக்குள், கால் நகங்கள், இடுக்குகளில் பரவும். இரண்டு வேளை குளிப்பது, உலர வைத்த ஆடைகள், வெயில் காலங்களில் கொட்டன் ஆடைகள் அணிவது, உடல் பருமனைக் குறைப்பதன் மூலமாக மீண்டும் தொற்று ஏற்படாமல் தவிர்க்கலாம்.

வீட்டில் யாராவது ஒருவருக்கு படர்தாமரை ஏற்பட்டுவிட்டால் அவரது சோப் மற்றும் துணிகளை மற்றவர்கள் பயன்படுத்துவதை முற்றிலுமாகத் தவிர்ப்பதும், பாதிக்கப்பட்டவரின் துணிகளைத் தனியாக உலர வைப்பதன் மூலமாகவும் இதன் பரவுதலைத் தடுக்கலாம்.

### செய்ய வேண்டியவை

படர்தாமரை தொற்று இருப்பது தெரிய வந்தால், உடனடியாக சரும மருத்துவரை அணுகி உரிய ஆலோசனை பெற வேண்டும். அது தவிர நீண்ட நாள்கள் ஆகியும் படர்தாமரை தொற்று குறையாமல் அதன் தொந்தரவு நீடித்தால், வேறு சில பரிசோதனைகள் மூலமாக கிருமியின் வகையைக் கண்டறிந்து தகுந்த சிகிச்சையை வழங்குவார்கள்.

மருத்துவர் ஆலோசனை பெறாமல் அனுமதியின்றி மருந்துக்கடைகளில் வாங்கிப் பயன்படுத்தும் பொதுவான மருந்துகள் மூலமாக நோயின் தன்மை குறையாது அதன் வீரியம் அதிகரிக்கவே வாய்ப்புண்டு.

படர்தாமரை தொற்று இருப்பவர்கள், கட்டாயமாக இரண்டு வேளை குளிப்பதும், நன்கு துவைத்த ஆடைகளைப் பயன்படுத்துவதும் நல்லது. அத்துடன், ஜீன்ஸ் போன்ற இறுக்கமான ஆடையைத் தவிர்த்து, தளர்வான கொட்டன் துணிகளையே அணிய வேண்டும்.

இவை சற்று படர்தாமரை குறைய ஏதுவாக அமையும்.

## போலியான சான்றிதழ்கள் சமர்ப்பித்து நியமனம்

# 14 பட்டதாரி - பயிற்சி ஆசிரியர்கள் நிறுத்தம்

அநுராதபுரம் எம்.ரீ.ஆரிப்

வடமத்திய மாகாணத்தில் போலியான கல்விச் சான்றிதழ்கள் மற்றும் நகல்களை சமர்ப்பித்து நியமனம் பெற்ற 14 பட்டதாரி மற்றும் பயிற்சி ஆசிரியர்களின் சேவை நிறுத்தப்பட்டுள்ளதாக வடமத்திய மாகாண பிரதான அமைச்சு மற்றும் கல்வி அமைச்சின் செயலாளர் சிறிமேவன் தர்மசேன தெரிவித்தார்.

கடந்த 1997 ஆம் ஆண்டு தொடக்கம் வடமத்திய மாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் பணியாயாற்றுவதற்காக அவ்வப்போது ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட 14 பட்டதாரி மற்றும் பயிற்சி பெற்ற ஆசிரியர்களின் சேவைகள் நிறுத்தப்பட்டுள்ளன.

பணிநீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்கள் வடமத்திய மாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் எட்டு முதல் இருபத்தைந்து ஆண்டுகள் வரை பணியாற்றியவர்கள். ஆசிரியர்களாக சேவையில் சேரும் போது சமர்ப்பிக்கப்பட்ட க.பொ.த சாதாரண தரம், உயர் தரம் மற்றும் பட்டப்படிப்பு சான்றிதழ்கள் அனைத்தும் போலியானவை என கண்டறியப்பட்டுள்ளதாக பிரதான அமைச்சின் செயலாளர் சிறிமேவன் தர்மசேன தெரிவித்தார்.

இந்த ஆசிரியர்களின் கல்விச் சான்றிதழ்கள் மற்றும் ஏனைய ஆவணங்களைச் சரிபார்க்க மாகாண போது சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கையில் பட்டதாரிகளில் சிலர் வெளிநாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்களில் படித்ததற்கான போலியான பட்டச்சான்றிழை சமர்ப்பித்துள்ள தாகவும் அந்த குழு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பேரனை மீட்கச் சென்ற பாட்டனார் மரணம்

அநுராதபுரம் எம்.ரீ. ஆரிப்

கெப்பித்திகொல்லாவ பொலிஸ் பகுதியில் மின்சார கம்பியில் சிக்கிய 17 வயது பேரனை மீட்கச் சென்ற பாட்டனார் உயிரிழந்துள்ளார்.

ஹேரத்ஹல்மில்லேவ பகுதியைச் சேர்ந்த விஜேரத்ன என்ற 74 வயதுடைய முதியவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். குறித்த 17 வயதான சிறுவன் வீட்டின் பின்பகுதியில் இருந்த நீரோடையில் குளிக்கச்சென்ற போது காட்டு விலங்குகளை வேட்டையாடுவதற்காக ஒருவரினால் சட்டவிரோதமாக இழுக்கப்பட்டிருந்த மின்கம்பியில் சிக்கியுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

அப்போது மின்சார கம்பியில் சிக்கிய 17 வயது பேரனை காப்பாற்றுவதற்காக சென்ற தாத்தாவும் மின்சார கம்பியில் சிக்கிள்ளார்.

பின்னர் பிரதேசவாசிகள் இருவரையும் காப்பாற்றி கெப்பித்தகொல்லாவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி 74 வயது நபர் உயிரிழந்துள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கெப்பித்தகொல்லாவ பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

# வெலிகம கிறிஸ்தவ ஆலயத்தில் விசேட வைபவம்



வெலிகம நிருபர்

நத்தார் பண்டிகையையொட்டி வருடாந்தம் வெலிகம கிறிஸ்தவ ஆலயத்தில் இடம் பெற்று வரும் விசேட வைபவம் ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது. வண. ஷால்ஸ் ஹேவா வசம் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் தென் மாகாண கத்தோலிக்க சபைத் தலைவர் வண. ரேமன் விக்ரம சிங்க மாஹிபாணன் பிரதம அதிதியாக கலந்து கொண்டனர். இதில் பௌத, இஸ்லாம்,மத குருமார்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

# தெவட்டகஹ பள்ளிவாசலுக்கு கலாசார அமைச்சர் விஜயம்





பீ.எம்.முக்தார்

புத்தசாசன,சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் சினிதும சுனில் செனவி நேற்று கொழும்பு தெவட்டகஹ செய்ஹ்க் உதுமான் வலியுல்லாஹ் தர்கா பள்ளிவாசலுக்கு விஜயம் செய்தார். பள்ளிவாசல் மற்றும் செய்ஹ் உஸ்மான் வலியுல்லாஹ் (ரஹ்) ஸியாரம் ஆகியவற்றின் தலைவர் நியாஸ் ஸாலி அமைச்சரை வரவேற்றார். பின்னர் அமைச்சருக்கு தலைவர் நியாஸ் ஸாலி பொன்னாடை போர்த்தி கௌரவித்தார். சங்கைக்குரிய ஹலீபதுஷ்ஷாதுலி மௌலவி அஸ்ஸெய்யித் அலவி ஸாலிஹ் மௌலானா (முர்ஸி) உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

# கலைஞர்களை கௌரவிக்கும் நிகழ்வில் 'திறனொளி' சஞ்சிகை வெளியீடு

பீ.எம் முக்தார்)

திறனொளி கலை கலாசார ஊடக வலையமைப்பின் 9ஆவது ஆண்டு நிறைவையொட்டி ஏற்பாடு செய்யப்பட்ட திறமைக்கான தேடல் தொனியில் நடைபெற்ற 100 கலைஞர்களை கௌரவிக்கும் நிகழ்வு அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ள சம்மாந்துறை பிரதேசத்தில் அப்துல் மஜீத் ஞாபகார்த்த பொது மண்டபத்தில் நடைபெற்றது.

இவ்விழாவில், நிர்வாகத்தவர்களுக்கு உறுப்பினர் அட்டைகளும் வழங்கப்பட்டதோடு, "திறனொளி" எனும் சஞ்சிகையும் வெளியிடப்பட்டது. இவ் விழாவில் கலந்து கொண்ட பேருவளை மண்ணைச் சேர்ந்த தேசபந்து பாத்திமா நுஹா நிஸார் "கவிஞினி" பட்டத்தை பெற்றுக் கொண்டார். இவ் விழாவில் நூலை வெளியிட்டவர்களின் நூல்கள் திறனொளி கலாசாலைக்கு கையளிக்கப்பட்டது. அதில் தேசபந்து நுஹா நிஸாரின் "புரியாத புதிர்" கவிதை பனுவலும் கையளிக்கப்பட்டது.

இவர் கடந்த 2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் "புரியாத புதிர்" எனும் நூலை வெளியிட்டதோடு, கடந்த செப்டம்பர் மாதம் (2024-09-16) "லங்கா புத்ர, தேசபந்து" எனும் அரச விருதையும் பெற்றுக் கொண்டார்.

இவ் விழாவுக்கு சிறப்பு அதிதிகளாக, தேசகீர்த்தி எம்.எம் றஸ்மி (கலாசார உத்தியோகத்தர், பிரதேச செயலகம், சம்மாந்துறை), ஜனாப் ஏ.எல் தௌபீக் (மாவட்ட கலாசார ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர், அம்பாறை மாவட்டம்), ஜனாப் ரீ.எம் றின்ஸான் (மாவட்ட கலாசார உத்தியோகத்தர், மாவட்ட செயலகம், அம்பாறை) ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

# புதிய சபாநாயகருக்கு ரிஷாட் எம்பி சபையில் வாழ்த்து

10ஆவது நாடாளுமன்றத்தின் இரண்டாவது புதிய சபாநாயகராக நியமிக்கப்பட்டுள்ள ஜகத் விக்கிரமரத்னவுக்கு, ஐக்கிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவருமான ரிஷாட் பதியுதீன் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

நேற்று (17) புதிய சபாநாயகருக்கு சபையில் வாழ்த்து தெரிவித்து, உரையாற்றிய அவர் கூறியதாவது,

"புதிய சபாநாயகராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள உங்களுக்கு எனது வாழ்த்துக்கள் அதேபோன்று, எமது அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி சார்பாகவும் மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின் றேன்.

பெரும்பான்மையைக் கொண்டுள்ள அரசாங்கத்தின் சபாநாயகராக நீங்கள் தெரிவு செய்யப்பட்டிருக்கிறீர்கள். ஒரு குறுகிய காலத்துக்குள் இரண்டாவது சபாநாயகராக நாடாளுமன்றத்தில் தெரிவாகியுள்ள நீங்கள், ஒரு வைத்தியராகவும் இருக்கின்றீர்கள்.

எனவே, சகல கட்சிகளையும், அனைத்து உறுப்பினர்களையும் சமமாக மதித்து, அனைவரினதும் உரிமைகளைப் பாதுகாத்து, நேர்மையாகச் செயற்படுவீர்கள் என்ற நம்பிக்கையோடு, உங்களை வாழ்த்தி விடைபெறுகின்றேன் நன்றி." என்று குறிப்பிட்டுள்ளார்.

# கல்வியை இடையூறின்றி தொடர புலமைப் பரிசில்

பீ.எம் முக்தார்

பேருவளை பிரதேசத்திலுள்ள 06 முஸ்லிம், சிங்கள பாடசாலைகளில் கல்வி பயிலும் குறைந்த வருமானம் பெறும் மாணவர்களுக்கு தமது கல்வியை இடையூறின்றி தொடர புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை பேருவளை மருதானை அல்-பாஸியத்துல் நஸ்ரியா முஸ்லிம் மகளிர் மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

பேருவளை அப்ரார் கல்வி நிலையம் இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது.

அப்ரார் கல்வி நிலைய ஸ்தாபகரும், முன்னாள் அமைச்சருமான பாக்கீர் மாக்காரின் வழிகாட்டலின் கீழ் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு தலைவர் முஹம்மத் நிஸாம் தலைமை வகித்தார்.

பாகிஸ்தான் நாட்டின் இலங்கை உயர் ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் (ஓய்வு நிலை) பஹீம் அஸீஸ் பிரதம அதிதியாகவும், கட்டார் செரட்டி இலங்கை பணிப்பாளர் முஹம்மத் அபூ கலீபா கௌரவ அதிதியாகவும் கலந்து கொண்டனர். மேற்படி, கல்வி நிலைய செயலாளர் கலாநிதி. மௌலவி எம் அஸ்வர் அஸாஹிம் (அல்-அஸ்ஹரி) வரவேற்புரை நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வில், பேருவளை மருதானை அல்-பாஸியத்துல் நஸ்ரியா முஸ்லிம் மகளிர் மகா வித்தியாலயம், பாஸியத்துல் நஸ்ரியா ஆண்கள் பாடசாலை, மாளிகாஹேனை ஸேம் ரிபாய் ஹாஜியார் மகா வித்தியாலயம், மஹகொடை ஐ.எல்.எம் ஸம்ஸு தீன் மகா வித்தியாலயம், மஸ்ஸ ல பௌத்த கனிஷ்ட வித்தியாலயம் ஆகிய ஆறு பாடசாலைகளில் கல்வி பயிலும் 50 வறிய மாணவர்களுக்கு இதன் போது புலமைப்பரிசில் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தான் உயர் ஸ்தானிகர், அப்ரார் கல்வி நிலையத்தின் பணிகளை பாராட்டி நினைவுச்சின்னமொன்றையும் வழங்கினார்.









## கலாசாரப் போட்டிகளில் மகளிருக்கு சந்தர்ப்பம்

கடந்த 44 ஆண்டுகளாக தலைநகரில் இயங்கி வரும் புதிய அலை கலை வட்டம் அதனது மகளிர் அணி மூலமாக தைத்திருநாளை முன்னிட்டு கலாசாரப் போட்டிகளை நடத்தவுள்ளது.

கோலம்போடுதல்,பூக்கட்டுதல் மற்றும் ஆடல் கலை போட்டிகள் என்பன நடைபெற வுள்ளன. இதில் பங்கேற்க விரும்புவோர் முழுமையான விபரங்களை பெற புதிய அலை கலை வட்ட மகளிர் அணி இல.53. சங்கமித்த மாவத்தை கொழும்பு-13 என்ற முகவரியிலோ அல்லது 075 4880172 என்ற வட்சப் இலக்கத்திற்கோ தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## போதைப்பொருட்களுடன் ஒருவர் கைது

அநுராதபுரம் எம்.ரீ.ஆரிப்

இராஜாங்கனை பொலிஸ் பகுதியில் போதைப்பொருட்களை வைத்திருந்த சந்தேக நபரை பொலிசார் கைது செய்துள்ளனர்.

பொலிசாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்குக்கமைய இராஜாங்கனை பகுதியில் நடத்திய சுற்றிவளைப்பின் போது சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடமிருந்து 46 கிராம் 100 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருள் மற்றும் 18 கிராம் 450 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருட்களை பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர் 46 வயதுடைய பஹளமாரகஹவெவ பகுதியைச் சேர்ந்தவர் என பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

சந்தேக நபரை தடுத்து வைத்து விசாரணை மேற்கொள்வதற்காக நீதிமன்ற தடுப்பு காவல் உத்தரவு பெறப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

## தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின்

# இளைஞர் பயிற்சி நிலையம் ஓட்டமாவடியில் திறப்பு




இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சின் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற இளைஞர் தொழில் பயிற்சி நிலையத்தின் தேசிய ரீதியான 56 வது நிலையமும் மட்டக்களப்பு மாவட்டத்தின் இரண்டாவது நிலையமும் நேற்று (16) ஓட்டமாவடி பொது நூலக கட்டடத்தில் திறந்து வைக்கப்பட்டது.

ஓட்டமாவடி தொழிற்பயிற்சி நிலையம் எனும் பெயரில் கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்தலால் ரத்னாயக்கவின் இணைப்பதிகாரி உமர் ஹத்தாப் அப்துல்லாஹ் மற்றும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைவரும் நிறைவேற்றுப் பணிப்பாளருமான சட்டத்தரணி சிந்தக்க பத்திரண ஆகியோரினால் உத்தியோகபூர்வமாக பிரதேச இளைஞர்களின் பயன்பாட்டிற்காகக் கையளிக்கப்பட்டது.

இதன்போது, கோறளைப்பற்று மேற்கு பிரதேச செயலாளர் ஏ.தாஹிர் அக்கீல், ஓட்டமாவடி பிரதேச சபையின் செயலாளர் எம். ஷிஹாப்தீன், மாகாண, மாவட்ட இளைஞர் சேவைகள் மறத்தின் உயர் அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

அத்துடன், இளைஞர்களை முன்னேற்றுவதற்கான இவ்வேலைத்திட்டத்தினை சமூகத்தின் தேவை எனக் கருதி பிரதேசத்திற்கு கொண்டு வரும் முயற்சியில் ஈடுபட்ட மாவட்ட இளைஞர் சேவைகள் மன்றத்தின் சிரேஷ்ட அதிகாரி ஏ.ஹனீபா இந்நிலையத்தின் பொறுப்பதிகாரியாக மன்றத்தின் பணிப்பாளர் சிந்தக்க ஹேவா பத்திரணவினால் நியமிக்கப்பட்டார்.

இங்கு கொரியன், ஆங்கிலம் மற்றும் சிங்கள மொழிப் பயிற்சி நெறிகள், தகவல் தொடர்பாடல், அழகுக் கலை, நெசவுக் கைத்தொழில், மனித வள முகாமைத்துவம் ஆகிய பயிற்சி நெறிகள் குறித்த நிலையத்தினால் கோறளைப்பற்றுப் பிரதேச இளைஞர் யுவதிகளுக்காக நடாத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அம்பியுலன்ஸும் பஸ்ஸும் நேருக்கு நேர் மோதி விபத்து

## மூவர் படுகாயம்

(வெல்லாவெளி நிருபர்)



மட்டக்களப்பு கல்முனை பிரதான வீதியின் செட்டிபாளையத்தில் செவ்வாயக் கிழமை(17) காலை மட்டக்களப் பிலிருந்து களுவாஞ்சிக்குடி நோக்கி சென்று கொண்டி ருந்த அம்பியுலன்ஸ் வண்டியும் எதிர் திசையில் சென்று கொண்டிருந்த இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் வண்டியும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குளாகியது.

இந்த விபத்தின்போது மூவர் படு காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்விபத்துச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவதவதாவது,

மட்டக்களப்பிலிருந்து களுவாஞ்சிக்குடி நோக்கி சென்று கொண்டிருந்த அம்பியுலன்ஸ் வண்டியும் எதிர் திசையில் சென்று கொண்டிருந்த இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் வண்டியும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குளாகியுள்ளது. இந்த விபத்துச் சம்பவத்தில் இரு வாகனங்களிலும் பயணித்தவர்கள் தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளதுடன், அம்பியுலன்ஸ் வண்டியில் பயணித்த சாரதி உட்பட மூன்று பேர் காயமடைந்து களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரம் தெரிவிக்கின்றது.

குறித்த அம்பியுலன்ஸ் வண்டியில் மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையிலிருந்து புறப்பட்டு, களுவாஞ்சிகுடியில் நடைபெறவுள்ள கூட்டம் ஒன்றுக்காக சென்றவேளையிலேயே இவ்விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரியவருகின்றது.

## நல்லாட்சிக்கான தேசிய முன்னணி

# உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தனித்தே போட்டியிடும்



(கியாஸ் ஷாபி)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில், ஐக்கிய மக்கள் சக்தியுடனோ அல்லது வேறு எந்த அணியுடனும் கூட்டுச் சேர்ந்து போட்டியிடுவதில்லை என கட்சி தீர்மானித்துள்ளதால், நல்லாட்சிக்கான தேசிய முன்னணி (என்எப்ஜிஜி) தனித்தே போட்டியிடும் என கட்சியின் தலைவர் எம்.எம்.அப்துல் ரஹ்மான் தெரிவித்தார். எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான கட்சியின் நிலைப்பாடு குறித்து, திருகோணமலை மாவட்ட, கிண்ணியா பிரதேச செயற்குழு உறுப்பினர்களுக்கு விளக்கம் விளக்கம் அளிக்கும் கூட்டம் ஒன்று ஞாயிற்றுக்கிழமை(15) கிண்ணியாவில் நடைபெற்றது.

இதன்போது, ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

2019 ஆம் ஆண்டு தேசிய மக்கள் சக்தியுடன் ஒரு பங்காளி கட்சியாக இருந்தோம். இலங்கை அரசியலில் மூன்றாவது சக்தி ஒன்றின் அவசியம் இருந்ததனால், அவர்களோடு, அன்று இணைந்து நாங்கள் பயணித்தோம். 2020 ஆம் ஆண்டு, பொதுத்தேர்களில் சில புரிந்துணர்வு இன்மையினால், தேசிய மக்கள் சக்தியுடன் இணைந்து, போட்டியிடக் கூடிய வாய்ப்பு எங்களுக்கு கிடைக்கவில்லை. இந்த நிலையில், கடந்த(2024) ஜனாதிபதி தேர்தல் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்தது. எங்களுக்கு கிடைத்த தகவல்களை அறிவுபூர்வமாக ஆராய்ந்து, என்பிபி அல்லாத ஒரு கட்சிக்கு நாங்கள் ஆதரவு தெரிவிக்க வேண்டிய நிலைக்கு ஆளானோம். இதன் காரணமாக சஜித் பிரேமதாசாவுக்கு ஆதரவளித்தோம். அதன் பிறகு நடைபெற்ற நாடாளுமன்ற பொதுத் தேர்தலில்(2024) நாங்கள் தனியாக போட்டியிட்டோம். கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் தனியாக போட்டியிட்டோம். இங்கு கிண்ணியா நகர மற்றும் பிரதேச சபைகளில் இரண்டு உறுப்பினர்களை பெற்றுக் கொண்டோம் என்றார்.

# 'அர்ஷின் நிழல் நோக்கி' நூல் வெளியீட்டு விழா



(எச்.எம்.எம்.பர்ஸான்)

ஓட்டமாவடியைச் சேர்ந்த எழுத்தாளர் எம்.ஐ.எம்.அன்வர் (ஸலபி,மதனி) எழுதிய அர்ஷின் நிழல் நோக்கி எனும் தலைப்பிலான நூல் வெளியீட்டு விழா அண்மையில் நடைபெற்றது. ஓட்டமாவடி – மீராவோடை அந்நூர் கேட்போர் கூடத்தில் இந்நிகழ்வு எச்.எல்.முகைதீன் (பலாஹி) தலைமையில் நடைபெற்றது.

இந்நூல் வெளியீட்டு நிகழ்வில் முதல் பிரதியினை சிரேஷ்ட சட்டத்தரணி ஹபீப் றிபான் பெற்றுக் கொண்டார்.நூல் ஆய்வு உரையினை பன்னூலாசிரியர் அஷ்ஷெய்க் ஹபீழ் எம்.முஸ்தபா (ஸலபி) நிகழ்த்தியதோடு, ஏற்புரையினை நூலாசிரியர் எம்.ஐ.எம்.அன்வர் (ஸலபி, மதனி) நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில், பிரதம அதிதியாக தென்கிழக்குப் பல்கலைக்கழக இஸ்லாமிய கற்கைகள் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி அஷ்ஷெய்க் எம்.ஐ.எம்.ஜெஸீல் (ஸலபி) கலந்து கொண்டதுடன், கௌரவ அதிதியாக கிழக்குப் பல்கலைக்கழக இஸ்லாமிய கற்கைகள் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி அஷ்ஷெய்க் பௌஸ/ல் புகாரி (ஸலபி) கலந்து கொண்டார்.

# நிரந்தர காதி நீதவானை நியமிக்குமாறு ஜனாதிபதிக்கு மகஜர்

கிண்ணியா பிரதேசத்துக்கு நிரந்தர காதி நீதவான் ஒருவரை நியமிக்கக் கோரி, ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. கிண்ணியா சிரேஷ்ட பிரஜைகள் சங்கத்தினால் திங்கட்கிழமை (16) இந்த மகஜர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

சிரேஷ்ட பிரஜைகள் சங்கத்தின் தலைவர் எம். ரீ.சபருள்ளாகானால், ஒப்பமிட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ள, அந்த மகஜரில் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது,

கடந்த 2023ஆம் ஆண்டு நவம்பர் மாதம் கிண்ணியா உட்பட, நாட்டின் பல பிரதேசங்களில் உள்ள காதி நீதிமன்றங்களில், நிலவும் காதி நீதிபதிகள் வெற்றிடங்களுக்காக நீதிச்சேவை ஆணைக்குழுவினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன.

வெற்றிடங்களை நிரப்புவதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டு, ஒரு வருடத்தைக் கடந்துள்ளபோதிலும், நியமனங்களை வழங்குவதற்கு இதுவரை எந்த நடவடிக்கையும் முன்னெடுக்கப்படாமையினால், கிண்ணியா பகுதி மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

கிண்ணியா காதி நீதிமன்றப் பிரிவில், ஆயிரத்துக்கும் மேற்பட்ட வழக்குகள் தேங்கிக் கிடக்கின்றன. கிண்ணியா பிரிவுக்கு பதில் காதி நீதவான் ஒருவர் நியமிக்கப்பட்டு வழக்குகள் நடைபெற்று வருகின்றபோதிலும், மக்களுக்கான சேவைகள் மாதத்தில் இரு நாட்கள் மட்டுமே நடைபெறுவதனால், வழக்குகள் தேங்கிக் கிடக்கின்றன.

# வித்தகர் விருது பெற்றார் ஆதம்பாவா

(எம்.எஸ்.எம். ஸாகிர்)



கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட இலக்கிய விழாவில் ஓய்வு பெற்ற முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் யூ.எல். ஆதம்பாவா “வித்தகர்” விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

இவர் சிறுவயது முதல் தற்போது வரை நாட்டார் பாடல்களைப் பாடியும், எழுதியும் வருகின்ற அதேவேளை, அவற்றை நூல் வடிவில் தொகுத்து “கிராமத்து மண்வாசம்”, “தென்கிழக்கின் பாரம்பரியம்” என்ற பெயரில் வெளியிட்டிருக்கின்றார்.

அத்தோடு பிரதேச. மாவட்ட, மாகாண மட்ட போட்டிகளிலும் பங்குபற்றி பல விருதுகளையும், சான்றிதழ்களையும் பெற்றுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# உதயசங்கமம் மகளிர் கொத்தணி அமைப்பு வருடாந்த ஒன்றுகூடலும் கௌரவிப்பும்









(வெல்லாவெளி நிருபர்)



மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலக பிரிவின் மகிழூர் கிழக்கு கிராம சேவகர் பிரிவின் கீழ் இயங்கும் உதயசங்கமம் மகளிர் கொத்தணி அமைப்பின் வருடாந்த ஒன்றுகூடல் மற்றும் கௌரவிப்பு விழா நிகழ்வுகள் அமைப்பின் தலைவி மங்கையற்கரசி கருணாகரன் தலைமையில் நடைபெற்றன. இந்த நிகழ்வில் உதயசங்கமம் மகளிர் கொத்தணி அமைப்பின் கீழ் பதினைந்து சுய உதவிக் குழுக்களின் சேமிப்புகள் மற்றும் வழங்கிய கடன் வசதிகள் போன்றவற்றின் முன்னேற்றங்கள் தொடர்பான சுய உதவி குழுக்களினால் காட்சிப்படுத்தப்பட்டன. மகிழூர் கிழக்கு கிராமத்தில் 5ம் தர புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த (சா/த) மற்றும் க.பொ.த (உ/த) பரீட்சைகளில் தங்களது திறமைகளை வெளிப்படுத்திய மாணவர்கள் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலாளர் சிவப்பிரியா வில்வரத்னம், LOH (Ladder of Hope) அமைப்பின் பொது முகாமையாளர் சகுந்தலா ரஞ்சினி மதிதரன், மண்முனை தென் எருவில்பற்று உதவி பிரதேச செயலாளர் சத்யகௌரி தரணிதரன் மற்றும் களுவாஞ்சிகுடி இலங்கை வங்கி முகாமையாளர் சா.சிவஞரனம் ஆகியோர் அதிதிகளாக கலந்து சிறப்பித்தனர்.

மேலும் மகிழூர் கிராமத்தின் முதல் சட்டத்தரணியாக கடமை புரியும் நிறோஜினி புருசோத்மன் மற்றும் உதயசங்கமம் மகளிர் அமைப்பின் முன்னேற்றத்திற்கு பங்காற்றிய மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் சந்திரசோதி ஜெயதீஸ்வரன் ஆகியோரும் இந்த நிகழ்வில் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

# சிரேஷ்ட ஊடகவியலாளர் சக்திவேலுக்கு இரு விருதுகள்

(ஏ.எச்.ஏ.ஹுஸைன்)



மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடியைச் சேர்ந்த சுதந்திர ஊடகவியலாளர் வடிவேல் சக்திவேல் இவ்வருடத்தில் இரண்டு விருதுகளைத் தனதாக்கிக் கொண்டுள்ளார்.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நடத்திய “தமிழ் இலக்கிய விழாவில்” 2023ஆம் ஆண்டின் ஊடகத்துறைக்கான “இளங்கலைஞர் விருது” வழங்கி இவர் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் இவ்விருது திருகோணமலையில் வைத்து வழங்கப்பட்டது. இதேவேளை, சர்வதேச தமிழ் வானொலி பிரான்ஸ் (ஐ.ரி.ஆர்) இன் 28வது ஆண்டு விழா யாழ்ப்பாணம் ரில்கோ மண்டபத்தில் இடம்பெற்றபோது “2024 இன் சிறந்த ஊடகவியலாளருக்கான விருது” இவருக்கு வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது..

ஊடகவியலாளர் சக்திவேல், இதற்கு முன்னரும் ஊடக விருதுகளைத் தனதாக்கிக் கொண்டுள்ளார். 2008ஆம் ஆண்டில் சிறந்த மக்கள் சேவை ஊடகவிருது, 2018ஆம் ஆண்டில் சிறந்த கட்டுரையாளருக்கான விருது, 2022ஆம் ஆண்டில் சுப்பிரமணியம் செட்டியார் விருது, உள்ளிட்ட தேசியான விருதுகளையும் மற்று கிராமிய, பிரதேச மட்டங்களில் பல விருதுகளையும் இவர் பெற்றுள்ளார்.

ஊடகவியலாளர் வடிவேல் சக்திவேல் கடந்த சுமார் 18 வருடங்களுக்கு மேலாக ஊடகத்துறையில் சுயாதீன ஊடகவியலாளராக செயற்பட்டு வருகின்றார்.



இந்தியாவுக்கான உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, வரலாற்றுச் சிறப்புமிக்க பௌத்த புனிதத் தலமான புத்தகயாவில் வழிபாட்டில் ஈடுபட்டார்.

# யாழில் எலிக்காய்ச்சலால் 99 பேர் பாதிப்பு

**▪ பு.கஜிந்தன்**

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் எலிக்காய்ச்சல் நோய் காரணமாக இதுவரை 99 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். தற்போது பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் 23 பேரும் யாழ் போதனா வைத்தியசாலையில் 6 பேரும் சிகிச்சைபெற்று வருகின்றனர் என யாழ்ப்பாண மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மேலும், கடந்த 24 மணிநேரத்தில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் 9 நோயாளர்களும் யாழ். போதனா வைத்தியசாலையில் 5 நோயாளர்களும் எலிக்காய்ச்சலுடன் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 24 மணிநேரத்தில் இந்நோய் காரணமாக எந்தவொரு இறப்பும் ஏற்படவில்லை. இதுவரை யாழ் மாவட்டத்தில் இந்நோய் காரணமாக 7 இறப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

எலிக்காய்ச்சல் நோய் வராமல் தடுப்பதற்காக தடுப்பு மருந்து வழங்கும் பணிகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது. நேற்று வரை ஏறத்தாழ 6000 பேருக்கு தடுப்பு மருந்துகள் வழங்கப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்ட சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் காய்ச்சல் நோயாளர்களை இனங்காண்பதற்காக சுகாதாரப் பணியாளர்கள் வீடுவீடாகச் சென்று ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பாதிக்கப்பட்ட சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் உள்ள கால்நடைகளில்



இக்கிருமித் தொற்று உள்ளதா என்பதை ஆய்வு செய்வதற்காக கொழும்பிலிருந்து கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்திலிருந்து குழு ஒன்று யாழ்ப்பாணம் மாவட்டத்திற்கு இன்று வருகை தரவுள்ளனர்.

# கடலலையில் அடித்துச் செல்லப்பட்ட ரஷ்ய பிரஜைகள் நால்வர் மீட்பு

ஹிக்கடுவை கடலில் நீராடச் சென்ற ஒரே குடுப்பத்தை சேர்ந்த ரஷ்ய பிரஜைகள் நால்வர் கடலலையில் அடித்துச் செல்லப்பட்ட நிலையில் உயிர்காப்பு அதிகாரிகளால் மீட்கப்பட்டுள்ளனர்.



ஹிக்கடுவை பொலிஸ் உயிர்காப்பு பிரிவு அதிகாரிகள் உடனடியாக செயற்பட்டு நால்வரையும் மீட்டு கரைக்கு கொண்டு வந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஒரே குடும்பத்தை சேர்ந்த 40 வயதுடைய ஆண் ஒருவரும் 39 வயதுடைய பெண் ஒருவரும், 7 மற்றும் 13 வயதுடைய சிறுமிகள் இருவரும் இவ்வாறு மீட்கப்பட்டுள்ளனர்.

ஹிக்கடுவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொலிஸ் உயிர்காப்பு பிரிவின் பொலிஸ் பரிசோதகர் ஹேவகே, பொலிஸ் கான்ஸ்டபிள் ஏக்கநாயக்க, பொலிஸ் கான்ஸ் டபிள் திஸாநாயக்க மற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஜயசிங்க ஆகியோரால் இவர்கள் காப்பாற்றப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மன்னாரில் பண்பாட்டுப் பெருவிழா





**▪ எஸ்.ஆர்.லெம்பேட்**

வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் அலகு ஏற்பாடு செய்த மாகாண பண்பாட்டுப் பெருவிழாவும்,கண்காட்சியும் நேற்று செவ்வாய்க்கிழமை (17) மன்னார் நகரசபை மண்டபத்தில் நடைபெற்றது.

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன் தலைமையில் நடைபெற்ற குறித்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன், சிறப்பு விருந்தினராக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன், மற்றும் திணைக்கள தலைவர்கள், பிரதேச செயலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மன்னார் பிரதான பாலத்திலிருந்து பண்பாட்டு ஊர்திகள்,கலை ஆற்றுகைகள் பண்பாட்டு பவனியாக விழா மண்டபமான மன்னார் நகர சபை மண்டபம் நோக்கி வருகை தந்தது.

மாகாண பண்பாட்டுப் பெரு விழாவையொட்டி வடந்தை-2024 எனும் நூல் வைபவ ரீதியாக வெளியீடு செய்து வைக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து கலைக்குரிசில் விருது வழங்குதல், 2023 ஆம் ஆண்டிற்கான வடக்கு மாகாண சிறந்த நூலுக்கான பரிசு வழங்குதல் மற்றும் இளங்கலைஞர் விருது வழங்குதல் உள்ளிட்ட நிகழ்வுகள் நடைபெற்றன.

# விடுதலைப் புலிகள் மீள் உருவாக்கத்திற்காக நிதி திரட்டிய வழக்கு: சங்கர் விடுதலை

**▪ பு.கஜிந்தன்**

பிரித்தானியப் பிரஜை யான சங்கர் விடுதலைப் புலிகள் மீள் உருவாக் கத்திற்காக நிதி திரட்டி இலங்கைக்கு அனுப்பியதாகக் குற்றம் சாட்டப்பட்ட வழக்கு விசாரணையில் தனது பெற்றோருக்கே நிதி அனுப்பியதாகத் தெரிய வந்துள்ளது. பெற்றோருக்கு நிதி அனுப்புவது குற்றமா?

என்ற வாதத்தையும் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வ.தவராசா நீதிமன்றில் முன்வைத்ததை அடுத்து கொழும்பு நீதவான் நீதிமன்ற நீதிபதி சந்தேக நபரை விடுதலை செய்தார்.

உலகத்தமிழ் பேரவையின் பேச்சாளர் சுரேன் சுரேந்திரன் மற்றும் உலகத்தமிழர் பேரவையின் நிர்வாகிகளுடன் இணைந்து பிரித்தானியப் பிரஜையான சங்கர் எல்.ரி.ரி.ஈ மீள் உருவாக்கத்திற்காக நிதி திரட்டி இலங்கைக்கு அனுப்பியதாக 2012ஆம் ஆண்டு குற்றப்புலனாய்வு பிரிவினரால் நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டதுடன் அவருக்கெதிராக பயணத்தடையும் விதிக்கப்பட்டிருந்தது.

பிரித்தானியப் பிரஜையான விஜயசுந்தரம் சங்கர் தனது தாயாரின் இறுதிச்சடங்கில் கலந்து




கொள்வதற்காகக் கடந்த நவம்பர் மாதம் 30ஆம் திகதி இலங்கை வருகை தந்தபோது கட்டுநாயக்க விமான நிலையத்தில் குற்ற புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார். இந்த வழக்கு நேற்று கொழும்பு நீதவான் மன்றில் எடுத்தும் கொள்ளப்பட்டபோது சந்தேக நபர் சங்கர் சார்பில் ஆஜராகிய ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி தவராசா தனது வாதத்தில் இந்த சந்தேக நபரை கைது செய்தமை சட்டரீதியற்ற கைது என்றும் 2009ஆம் ஆண்டு யுத்தம் மௌனிக்கப்பட்ட பின்னர் பல நூற்றுக்கணக்கான அப்பாவிகள் கைது செய்யப்பட்ட பொழுது இந்த சந்தேக நபரும் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு இவர் மீது எந்தக் குற்றச்சாட்டும் சுமத்த முடியாத நிலையில் விடுதலை செய்யப்பட்டார்.

அதன் பின்னர் 2010ஆம் ஆண்டு பிரித்தானியாவுக்கு பயணமாகிய பின்னர் பிரித்தானிய பிரஜாவுரிமையும் பெற்றுக்கொண்டார்.

பொலிஸார் 2012இல் சந்தேக நபர் சங்கருக்கு எதிராக நிதி சேகரித்ததாக நீதி மன்றில் அறிக்கையைத் தாக்கல் செய்து விசாரணை செய்த போதிலும் 2024ஆம் ஆண்டு கைது செயப்படும்வரை இவருக்கெதிராக பொலிஸ் விசாரணையில் நீதிமன்றில் எவ்வித சான்றுகளும் முன்வைக்கப்படவில்லை என்பதோடு சந்தேக நபர் எந்த குற்றத்தைப் புரிந்தார் என்பதை நீதிமன்றில் தாக்கல் செய்த அறிக்கைகளில் பொலிசார் தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை

2010ஆம் ஆண்டிலிருந்து 2024ஆம் ஆண்டு கைது செய்யப்படும் வரை சந்தேக நபர் இலங்கைக்கு எந்த விஜயமும் மேற்கொண்டிருக்கவில்லை என்பதை நீதி மன்றின் கவனத்துக்குக் கொண்டு வந்ததுடன்.

மேலும் தனது வாதத்தில் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி. தவராசா இவ்வாறான சட்டரீதியற்ற கைதுகளினால் புலப்பெயர் தமிழர்களின் வெளிநாட்டு முதலீடுகள் குறைவடைவதுடன் சுற்றுலாத்துறையிலும் பாரிய பாதிப்புகள் ஏற்படும். இது இலங்கை பொருளாதாரத்தில் வீழ்ச்சியையும் ஏற்படுத்தும், என்பதனையும் நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

# மூடத்தனங்களை மாற்றியமைக்க வேண்டும்

## - மட்டக்களப்பு மாவட்டச் செயலாளர் ஜஸ்டினா



**▪ ஏ.எச்.ஏ.ஹுஸைன்**

சமூகக் கட்டமைப்புக்களினால் வடிவமைக்கப்பட்ட கருத்தியல்களைப் பெரிதுபடுத்திக் கொண்டு பெண்களின் விவகாரங்களைச் சீர்தூக்கிப் பார்க்காமல் விலகி இருந்து வந்துள்ளோம், ஆனால் அவற்றை இனி மேலும் அடியொற்றி நடக்காமல் மூடத்தனங்களை மாற்றியமைக்க வேண்டுமென மட்டக்களப்பு மாவட்டச் செயலாளர் ஜஸ்டினா ஜுலேகா தெரிவித்தார்.

"மாண்புடன் கூடியதாக மாதவிடாய் செயற்பாட்டை நிலை நிறுத்து வதற்கு பாலியல் உற்பத்தி சுகாதார உரிமைகளே அடிப்படை" எனும் இவ்வாண்டிற்கான தொனிப் பொருளில் அமைந்த நிகழ்வுகள் மட்டக்களப்பு கல்லடியில் சுமார் நூற்றுக்கு மேற்பட்ட செயற்பாட் டாளர்கள் முன்னிலையில் விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் நிகழ்ச்சித் திட்ட தலைமை அதிகாரி இந்துமதி ஹரிஹரதாமோதரன் தலைமையில் அண்மையில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்நிகழ்வகளில் பங்குபற்றி தொடர்ந்து உரையாற்றிய மாவட்டச் செயலாளர் ஜஸ்டினா ஜுலேகா சமூகக் கட்டமைப்புக்களினால் வடிவமைக்கப்பட்டு காலங்கால மாகப் பின்பற்றப்பட்டு வரும் பிற்போக்குவாத கருத்தியல் காரணமாக பெண்களின் நலன்கள், மதிப்புக்கள் பேசப்படாது மறைக்கப்பட்டுக் கொண்டு வந்துள்ளன.

மாதவிடாய் எனும் விடயத்தை மறைக்காது துணிவுடன் முன்னெடுத்துச் செல்ல வேண்டும். அதற்கான காலம் இப்பொழுது கைகூடி வந்துள்ளது. தொலைக்காட்சிகளில் கூட இப்பொழுது இதுபற்றி விளம்பரங்கள் ஒளிபரப்பாகின்றன.

விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம் முன்னெடுத்துள்ள, இதுவரை காலமும் பேசப்படாது மறைக்கப்பட்டு வந்துள்ள, ஆனால், கட்டாயம் பேசப்பட வேண்டிய பெண்களின் மாண்புறும் மாதவிடாய் எனும் விடயத்திற்கு மாவட்டச் செயலக நிருவாகத்தின் முழுமையான ஆதரவை நான் வழங்குவேன்." என்றார்.




# மணிப்பூரில் கொலை பயங்கரவாதிகள் 8 பேர் கைது



பீகார் மாநிலத்தைச் சேர்ந்த இரு புலம்பெயர் தொழிலாளர்களை கடந்த சனிக்கிழமை (14) கொலை செய்யப்பட்ட சம்பவத்தில் பயங்கரவாத அமைப்பைச் சேர்ந்த 8 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மணிப்பூரில் காங்லிபாக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஒரு பிரிவு தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்பாகும். இந்த பயங்கரவாத அமைப்பினர், இம்பால் பள்ளத் தாக்கில் மக்களை மிரட்டி பணம் பறித்தல் மற்றும் பிற குற்றங்களில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களை கண்டறிந்து பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர். கடந்த சனிக்கிழமை (14) பீகார் மாநிலத்தைச் சேர்ந்த 2 புலம்பெயர் தொழிலாளர்கள் இந்த பயங்கரவாத அமைப்பை சேர்ந்தவர்களால் கொலை செய்யப்பட்டனர். இந்த கொடூர செயலில் ஈடுபட்டவர்களை பிடிக்க பொலிஸார் தொடர் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டு வந்தனர். இந்த நிலையில் புலம்பெயர் தொழிலாளர்கள் கொலை வழக்கில் பயங்கரவாத அமைப்பைச் சேர்ந்த 8 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும் அவர்களிடமிருந்து ஆயுதங்கள், வெடிபொருட்கள் மற்றும் 10 தொலைபேசிகளை பொலிஸார் பறிமுதல் செய்தனர். தொடர்ந்து அவர்களிடம் விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

# யாசகம் அளிப்பவர்கள் மீதும் வழக்குப்பதிவு



மத்தியப்பிரதேசம் இந்தூரில் யாசகம் எடுப்பவர்கள் பெருகிவிட்ட நிலையில் அதை கட்டுப்படுத்த நகர நிர்வாகம் நடவடிக்கை எடுத்து வருகிறது. ஆனாலும் யாசகம் பெறுவோர் எண்ணிக்கை குறையவில்லை. எனவே, அடுத்த கட்ட நடவடிக்கையாக "வரும் ஆண்டு முதலாம் திகதி முதல் பணத்தையோ, உணவையோ யாசகமாக அளிப்பவர்கள் மீதும் வழக்குப்பதிவு செய்யப்படும்" என மாவட்ட ஆட்சியாளர் ஆஷிஷ் சிங் தெரிவித்துள்ளார்.

யாசகம் எடுப்பது தடுக்கப்படுவதால் பாதிக்கப்படுபவர்களுக்கு மறுவாழ்வு தர ஏற்பாடு செய்து வருவதாகவும் ஆட்சியாளர் தெரிவித்தார். இந்தியாவில் 10 நகரங்களை யாசகம் பெறுவோர் இல்லாத நகரங்களாக மாற்ற மத்திய சமூக நீதித்துறை திட்டமிட்டுள்ளது. அதில் இந்தூரும் இடம் பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# குஜராத்தில் விபத்து 6 பேர் உயிரிழப்பு




பாவ்நகரில் இருந்து மஹுவா நோக்கி ஏராளமான பயணிகளுடன் சென்று கொண்டிருந்த தனியார் பஸ் ட்ரபாஜ் என்ற கிராமம் அருகே வந்த போது, முன்னால் சென்ற லொறி மீது எதிர்பாராத விதமாக மோதியதில் 6 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். அசுர வேகத்தில் பஸ் வந்ததால் கட்டுப்பாட்டை இழந்து விபத்தில் சிக்கியது. மோதிய வேகத்தில் பஸ் முற்றிலும் சேதம் அடைந்ததுடன் 10இற்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர்.

விபத்து குறித்து அறிந்து சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார், சடலங்களை மீட்டனர். படுகாயம் அடைந்து உயிருக்கு போராடியவர்களை மீட்டு வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர். விபத்து குறித்து பொலிஸார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# சென்னை விமான நிலையத்தில் போதைப்பொருள் மீட்பு

தாய்லாந்தில் இருந்து சென்னை விமான நிலையத்திற்கு போதைப்பொருள் கடத்தி வரப்பட்டதாக மத்திய புலனாய்வு அதிகாரிகளுக்கு இரகசிய தகவல் கிடைத்ததையடுத்து பாங்கொக்கிலிருந்து வந்திறங்கிய பயணிகளிடம் விமான நிலைய அதிகாரிகள் தீவிர பரிசோதனை மேற்கொண்டனர். சென்னையை சேர்ந்த பயணி ஒருவரின் உடைமையை மோப்பநாய் அடையாளங்கண்டதையடுத்து அவர் கொண்டு சென்ற உடைமைகளை அதிகாரிகள் பரிசோதனை செய்தனர். பரிசோதனையின் போது சுமார் 7.5 கோடி இந்திய மதிப்பிலான உயர்ரக கஞ்சா போதைப்பொருட்கள் மீட்கப்பட்டன. தொடர்ந்து அந்நபரை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.



# ஒரே நாடு, ஒரே தேர்தல் மசோதா மக்களவையில் சமர்ப்பிப்பு



ஒரே நாடு ஒரே தேர்தல் மசோதாவை மத்திய சட்ட அமைச்சர் அர்ஜுன் ராம் மேக்வால் மக்களவையில் நேற்று தாக்கல் செய்தார். மக்களவைத் தேர்தல், மாநில மற்றும் யூனியன் பிரதேச சட்டப்பேரவைகளின் தேர்தல்களை ஒரே காலகட்டத்தில் நடத்தி முடிக்க பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இதற்கான மசோதா மக்களவையில் நேற்று தாக்கல் செய்யப்பட்டது. மத்திய சட்ட அமைச்சர் அர்ஜுன் ராம் மேக்வால் இந்த மசோதாவை தாக்கல் செய்தார்.

இந்த மசோதாவுக்கு காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்துள்ளன. மசோதாவை எதிர்த்துப் பேசிய காங்கிரஸ் எம்பி மணீஷ் திவாரி, "ஒரே நாடு, ஒரே தேர்தல் மசோதா அரசியலமைப்பின் அடிப்படைக் கோட்பாட்டின் மீது தாக்குதல் நடத்துகிறது. இந்த மசோதாவை பரிசீலிப்பது இந்த அவையின் சட்ட திறனுக்கு அப்பாற்பட்டது. அதைத் திரும்பப் பெறுமாறு அரசாங்கத்தை வலியுறுத்துகிறோம்" என தெரிவித்தார்.

திரிணமூல் காங்கிரஸ் எம்பி கல்யாண் பானர்ஜி, "ஒரே நாடு ஒரே தேர்தல் மசோதா அரசியலமைப்பின் அடிப்படை கட்டமைப்பை பாதிக்கிறது. சட்டப்பிரிவு 82 மற்றும் துணைப்பிரிவு 5 அனைத்து அதிகாரத்தையும் தேர்தல் ஆணையத்துக்கு வழங்குகிறது. உலகம் அழியும் வரை ஒரே கட்சியால் ஆட்சி அமைக்க முடியாது" என கூறி மசோதாவுக்கு எதிர்ப்பு தெரிவித்தார். சிவசேனா எம்.பி. அனில் தேசாய் உள்ளிட்டோரும் இந்த மசோதாவுக்கு எதிர்ப்பு தெரிவித்தனர்.

இந்த மசோதா நாடாளுமன்ற கூட்டுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இக்குழு 90 நாட்களில் மசோதா குறித்து ஆய்வு செய்து அறிக்கை தாக்கல் செய்யும். தேவைப்பட்டால் காலக்கெடு நீட்டிக்கப்படும். கூட்டுக்குழுவில் பாஜகவுக்கு பெரும்பான்மை இருப்பதால் அங்கு இந்த மசோதா ஏற்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனைத் தொடர்ந்து இந்த மசோதா மீது மக்களவை மற்றும் மாநிலங்களவையில் விவாதிக்கப்பட்டு, வாக்கெடுப்புக்கு விடப்படும்.

# கேரள மாநிலத்தில் மருத்துவக்கழிவுகள்

## டிடிவி தினகரன் கண்டனம்



கேரளா மாநில எல்லையோர மாவட்டங்களில் மருத்துவக்கழிவுகளை வீசுவதற்கு எதிராக அம்மா மக்கள் முன்னேற்ற கழக (அ.ம.மு.க) பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் தனது எக்ஸ் சமூக வலைதள பதிவில் கண்டனம் தெரிவித்திருந்தார்.

கேரள மாநிலத்தின் எல்லையோர மாவட்டங்களான திருநெல்வேலி மற்றும் தென்காசியின் பல்வேறு பகுதிகளில் அம் மாநிலத்தின் ஏராளமான இறைச்சி மற்றும் பயன்படுத்தப்பட்ட மருத்துவ கழிவுகள் கொட்டப்பட்டு இருப்பதாக வெளியாகியிருக்கும் செய்திகள் அதிர்ச்சி அளிக்கின்றன. தமிழகத்தை குப்பை கிடங்காக பயன்படுத்தி மருத்துவ மற்றும் இறைச்சி கழிவுகளை எல்லையோர மாவட்டங்களின் நீர்நிலைகளுக்கு அருகில் கொட்டி வரும் கேரள அரசால் அந்த நீரை பயன்படுத்தும் பொது மக்களுக்கு பல்வேறு உடல் பாதைகளும் பக்கவிளைவுகளும் ஏற்படுவதோடு இயற்கை வளங்களும் கடுமையாக பாதிக்கப்படுவதாக புகார் எழுந்துள்ளது. தமிழகத்தின் எல்லையோர மாவட்டங்களில் விதிகளுக்கு மாறாக மருத்துவ கழிவுகளை கொட்டுபவர் மீது குண்டர் சட்டத்தில் நடவடிக்கை எடுக்க பரிசீலனை செய்து கொண்டு வருவதாக கடந்த ஆண்டு கூறிய தி.மு.க அரசு அது தொடர்பாக எந்தவிதமான நடவடிக்கையையும் எடுக்காததே மருத்துவ கழிவுகள் கொட்டப்படுவது தொடர்கதையாகி வருவதற்கு காரணம் என சமூக ஆர்வலர்கள் குற்றம் சாட்டுகின்றனர். எனவே சுற்றுச் சூழலுக்கும் பொதுமக்களின் சுகாதாரத்திற்கும் கேடு விளைவிக்கும் வகையில் விதிகளுக்கு மாறாக மருத்துவக் கழிவுகளை கொட்டும் குப்பை கிடங்காக பயன்படுத்தி வரும் கேரளா அரசுக்கு கடும் கண்டனத்தை தெரிவிப்பதோடு இனிவரும் காலங்களில் சோதனை சாவடிகளில் சோதனையை தீவிரப்படுத்தி இது போன்ற செயல்களில் ஈடுபடுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை வலியுறுத்துகிறேன் என அ.ம.மு.க பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் தனது எக்ஸ் சமூக வலைதள பதிவில் கண்டனம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மொஸ்கோவில் வெடி விபத்து; ரஷ்ய இராணுவ ஜெனரல் மரணம்



மொஸ்கோவில் இடம்பெற்ற வெடிவிபத்தில் ரஷ்ய இராணுவத்தின் உயர்மட்ட ஜெனரல் ஒருவர் உட்பட இருவர் உயிரிழந்துள்ளனர்.

மொஸ்கோவில் நடந்த வெடிப்பின் விளைவாக, ரஷ்ய ஆயுதப்படைகளின் கதிரியக்க, இரசாயன மற்றும் உயிரியல் பாதுகாப்பு படைகளின் தலைவரான லெப்டினன்ட் ஜெனரல் இகோர் கிரில்லோவ் மற்றும் அவரது உதவியாளர் கொல்லப்பட்டதாக ரஷ்ய விசாரணைக் குழு தெரிவித்துள்ளதாக ஸ்புட்னிக் செய்தி வெளியிட்டுள்ளது.

விசாரணையின்படி, ஞாயிற்றுக்கிழமை ஒரு மொஸ்கோவின் ரியாசான்ஸ்கி ப்ராஸ்பெக்டில் அமைந்துள்ள குடியிருப்பு கட்டிடத்தின் நுழைவாயிலுக்கு அருகில் நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த வெடிபொருள் வெடித்துள்ளது.

முதற்கட்ட விசாரணையின்படி, வீட்டின் நுழைவாயிலில் வைக்கப்பட்டிருந்த மின்சார மோட்டார் சைக்கிளில் இந்த வெடிகுண்டு வைக்கப்பட்டுள்ளது. புலனாய்வாளர்கள் சம்பவ இடத்தில் புலனாய்வு பணிகளை மேற்கொண்டனர். குற்றவாளியை தேடும் பணி நடந்து வருகிறது என ரஷ்ய புலனாய்வு குழுவின் செய்தி சேவை தெரிவித்துள்ளது. இதேவேளை, ரஷ்ய பாதுகாப்புப் படைகள் தென்கிழக்கு மொஸ்கோவில் லெப்டினன்ட் ஜெனரல் இகோர் கிரில்லோவ் கொல்லப்பட்ட கட்டிடத்தின் நுழைவாயிலுக்கு அருகில் உள்ள கண்காணிப்பு கமராக்களில் இருந்து வீடியோவை ஆய்வு செய்யத் தொடங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.




# நம்பிக்கை வாக்கெடுப்பில் ஜேர்மனி ஜனாதிபதி தோல்வி

நம்பிக்கை வாக்கெடுப்பில் ஜேர்மனி ஜனாதிபதி ஓலாப் ஸ்கால்ஸ் தோல்வி அடைந்தார். பெப்ரவரியில் முன்கூட்டியே தேர்தல் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.



ஜேர்மனி ஜனாதிபதி ஓலாப் ஸ்கோல்ஸ் கடந்த 2021ல் நடந்த தேர்தலில் வெற்றி பெற்று அவரது கூட்டணி ஆட்சி அமைந்தது. அவர் கொண்டு வந்த பொருளாதார சட்டங்களுக்கு கூட்டணி கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்து ஆதரவை வாபஸ் பெற்றன. இதனால் ஆளுங்கட்சி அரசாங்கத்தின் மீது நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வரப்பட்டது. இந்நிலையில், அந்நாட்டு நாடாளுமன்றத்தில் நம்பிக்கை வாக்கெடுப்பு நடந்தது. நம்பிக்கை வாக்கெடுப்பில் ஜேர்மனி ஜனாதிபதி ஓலாப் ஸ்கால்ஸ் தோல்வி அடைந்தார். 733 இடங்களைக் கொண்ட கீழ்சபையில் ஜனாதிபதி ஓலாப் ஸ்கால்ஸ் 207 உறுப்பினர்களின் ஆதரவை பெற்று தோல்வி அடைந்தார். அதேநேரத்தில், 394 உறுப்பினர்கள் எதிராக வாக்களித்தனர். 116 பேர் வாக்களிப்பினை புறக்கணித்தனர். ஜனாதிபதி வெற்றி பெற தேவையான 367 பெரும்பான்மையை விட மிகக் குறைவாகவே பெற்று இருந்தார். இதன் காரணமாக நம்பிக்கை வாக்கெடுப்பில ஜேர்மனி ஜனாதிபதி தோல்வியை தழுவினார்.

# ரஷ்யாவே காப்பாற்றியது; அல் ஆஸாத் தெரிவிப்பு

சிரியாவில் இருந்து வெளியேறும் எண்ணம் எனக்கு இல்லை. ஆனால் எங்களது படைத்தளம் தாக்குதலுக்கு ஆளானதை தொடர்ந்து ரஷ்ய படையினர் என்னை காப்பாற்றி தங்கள் நாட்டுக்கு அழைத்து வந்து விட்டனர் என ரஷ்யாவில் தஞ்சம் புகுந்துள்ள முன்னாள் சிரியா ஜனாதிபதி அல் ஆஸாத் தெரிவித்தார். மேற்காசிய நாடான சிரியாவில், ஷியா பிரிவைச் சேர்ந்த பஷார் அல் ஆஸாத் ஜனாதிபதியாக இருந்தார். இவருக்கும், பல கிளர்ச்சி குழுக்களுக்கும் இடையே, கடந்த 13 ஆண்டுகளாக உள்நாட்டு போர் நடந்து வந்தது. அபு முகமது அல் கோலானி தலைமையிலான ஹயாத் தாஹ்ரிர் அல் ஷாம் என்ற கிளர்ச்சி படை, சமீபத்தில், தலைநகர் டமாஸ்கஸை கைப்பற்றியது.



இதனையடுத்து நாட்டை விட்டு தனி விமானத்தில் தப்பிய பஷார் அல் ஆஸாத் ரஷ்யாவில் தஞ்சமடைந்தார். இதனால் அந்த நாட்டில் பதற்றமான சூழல் நிலவுகிறது. சிரியாவை விட்டு தப்பியோடிய பின் முதல் அறிக்கை ஒன்றை ஆஸாத் வெளியிட்டுள்ளார். நாடு பயங்கரவாதிகளின் கைகளில் சிக்கியது. சிரியா ஜனாதிபதியாக நான் பதவியை இராஜினாமா செய்யவோ, தப்பியோடவோ ஒருபோதும் நினைக்கவில்லை. டிசம்பர் 8ம் திகதி அதிகாலை வரை டமாஸ்கஸில் இருந்து எனது கடமையை செய்தேன். நிலைமை மோசமானதை தொடர்ந்து நான் ரஷ்ய படைத்தளம் அமைந்திருக்கும் லடாக்கியா பகுதிக்கு சென்று விட்டேன். அங்கிருந்து கொண்டு தொடர்ந்து போர் நடத்துவதே எனது திட்டமாக இருந்தது. ஆனால் அந்த இடமும் தாக்குதலுக்கு ஆளானதை தொடர்ந்து ரஷ்ய படையினர், என்னை அவசர அவசரமாக தங்கள் நாட்டுக்கு பாதுகாப்பாக அழைத்து வந்து விட்டனர். தனிப்பட்ட ஆதாயத்திற்காக நான் ஒருபோதும் பதவியை விரும்பவில்லை. சிரியா மக்களின் நம்பிக்கையால் ஆதரிக்கப்படும் பாது காவலராக நான் கருதுகிறேன். சிரியா மீண்டும் சுதந்திரமாக செயல்படும் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது என்றார்.

# துருக்கியில் கள்ளச் சாராயம் அருந்தி 37 பேர் பலி

துருக்கி நாட்டில் கடந்த மாதம் முதல் கள்ளச் சாராயம் அருந்தி பலர் உயிரிழந்துள்ளனர். துருக்கி தலைநகர் இஸ்தான்புல்லில் கடந்த மாதம் 1ம் திகதியிலிருந்து 37 பேர் உயிரிழந்ததாக அந்நாட்டு அரசாங்கம் தெரிவித்துள்ளது. கள்ளச்சாராயம் அருந்தியவர்களில் 17 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். இதனை தொடர்ந்து கள்ளச்சாராய ஒழிப்பு நடவடிக்கையில் அந்நாட்டு அரசாங்கம் இறங்கியுள்ளது. அதன்படி கடந்த 10 நாட்களில் கள்ளச்சாராயம் விற்றதாக 85 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும் 40,000 லீட்டர் கள்ளச்சாராயம் அழிக்கப்பட்டுள்ளதாக துருக்கி அரசாங்கம் தெரிவித்துள்ளது.

# அபுதாபிலிருந்து வந்த இளைஞருக்கு குரங்கம்மை

அபுதாபியில் இருந்து கேரளாவிற்குச் சென்ற இளைஞருக்கு குரங்கம்மை தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

குரங்கம்மை என்பது விலங்குகளில் இருந்து மனிதர்களுக்கு பரவும் ஒரு வகை தொற்றாகும். ஆபிரிக்காவில் ஆய்வகம் ஒன்றில் ஆராய்ச்சிக்காக வைக்கப்பட்டிருந்த குரங்கில் இருந்து




இதன் வைரஸ் கிருமி எடுக்கப்பட்டதால் இந்த தொற்றுக்கு குரங்கம்மை என்று பெயர். காய்ச்சல், கடும் தலைவலி, சரும கொப்பளங்கள் ஆகியவை இதன் அறிகுறிகளாகும்.

இந்நிலையில் அபுதாபியில் இருந்து கேரளாவிற்குச் சென்ற 26 வயது இளைஞருக்கு குரங்கம்மை தொற்று இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. வயநாட்டைச் சேர்ந்த அவர், குரங்கம்மை தொற்றுகளுடன் காணப்பட்டதால் பரியவரம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். அவரின் உடல்நிலை சீராக இருந்தாலும் தொடர்ந்தும் மருத்துவர்கள் கண்காணித்து வருகின்றனர். இதனிடையே தலசேரியைச் சேர்ந்த மற்றொரு இளைஞருக்கு குரங்கம்மை தொற்று இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. இவர் துபாயில் இருந்து கேரளாவிற்குச் சென்றுள்ளார்.



குரங்கம்மை அறிகுறிகளுடன் அவர் காணப்பட்டதால், மாதிரிகள் சேகரிக்கப்பட்டு பரிசோதனைக்காக ஆய்வகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதன் முடிவுகள் வெளியான பின்னே, குரங்கம்மை பாதிப்பு உள்ளதா என்பது தெரிய வரும் என மருத்துவர்கள் தெரிவித்தனர்.

# அமெரிக்க பாடசாலையில் துப்பாக்கிச்சூடு;

## 2 பேர் பலி, 6 பேர் படுகாயம்

அமெரிக்காவில் பாடசாலை ஒன்றில் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில், 3 பேர் உயிரிழந்தனர். 9 பேர் பலத்த காயமுற்றனர்.

அமெரிக்காவின் விஸ்கான்சின் மாகாணத்தில் பாடசாலை ஒன்று இயங்கி வருகிறது. இந்த பாடசாலையில் நூற்றுக்கணக்கான மாணவ, மாணவிகள் கல்வி பயின்று வருகின்றனர். இந்நிலையில், பாடசாலை வளாகத்தில், 15 வயது மாணவி ஒருவர் சரமாரியாக துப்பாக்கிச் சூடு நடத்தினார். இதில் 2 பேர் உயிரிழந்தனர். 6 பேர் பலத்த காயமுற்றனர். இவர்கள் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சிலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதனால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது. துப்பாக்கிச்சூடு நடத்திய மாணவியும் உயிரிழந்துவிட்டார் என பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

# சர்ச்சைக்குரிய ஆடைக் கட்டுப்பாடு; இடைநிறுத்தியது ஈரான்

எதிர்வரும் வெள்ளிக்கிழமை (20) நடைமுறைக்கு வரவிருந்த மிகவும் சர்ச்சைக்குரிய "ஹிஜாப் மற்றும் கற்பு சட்டம்" அமுலாக்கத்தை ஈரானின் உச்ச தேசிய பாதுகாப்பு கவுன்சில் (SNSC) இடைநிறுத்தியுள்ளது.

சட்டத்திற்கு எதிராக உள்நாட்டு, சர்வதேச கண்டனங்கள் மற்றும் விமர்சனங்கள் அதிகரித்து வரும்



நிலையில் இந்த திடீர் இடைநிறுத்தம் வந்துள்ளது. சட்டம் தெளிவற்ற நிலையில் உள்ளதாக தெரிவித்த ஈரானிய ஜனாதிபதி சூத் பெசெஸ்கியன் (Masoud Pezeshkian) அதை நடைமுறைப்படுத்துவதற்கு சீர்திருத்தம் அவசியம் என விவரித்தார். இதன் விளைவாக குறித்த சட்டமூலம் மறுபரிசீலனைக்கு உட்படவுள்ளது.

பொது வெளியில் தலைமுடி, முன்கைகள் அல்லது கீழ் கால்களை முழுமையாக மறைக்கத் தவறும் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு அபராதம், 15 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை உள்ளிட்ட கடுமையான தண்டனைகளை குறித்த சட்டமானது முன்மொழிந்தது.

அதேநேரம், இது மனித உரிமை ஆர்வலர்களால் கடுமையான விமர்சனங்களையும் எதிர்கொண்டது. பல தசாப்தங்களாக ஈரான் இஸ்லாமியக் குடியரசின் ஆட்சியாளர்களால் தேசிய பாதுகாப்பு முன்னுரிமையாகக் கருதப்படும் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு விதிக்கப்பட்ட கடுமையான ஆடைக் கட்டுப்பாடுகள் முன்பு எதிர்ப்புகளைத் தூண்டின. புதிய சட்டத்தின் கீழ் அந்த கட்டுப்பாடுகளானது மேலும் இறுக்கமாக்கப்படுவதுடன், அதனை மீறும் நபர்களுக்கு எதிராக 15 ஆண்டுகள் சிறைத்தண்டனை மற்றும் அபராத விதிப்பினையும் கட்டாயப்படுத்தும். கடந்த ஜூலை மாதம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் போது, ஹிஜாப் விவகாரத்தில் ஈரானியப் பெண்களை நடத்துவதை அப்போதைய ஜனாதிபதி வேட்பாளரான பெஷேஷ்கியன் வெளிப்படையாக விமர்சித்தார். ஹிஜாப் விவகாரத்தில் அவர்களின் தனிப்பட்ட வாழ்க்கையில் தலையிட மாட்டோம் என்றும் அவர் உறுதியளித்திருந்தார்.

2022 ஆம் ஆண்டிலிருந்து ஈரானில் ஹிஜாபைச் சுற்றியுள்ள பதட்டங்கள் அதிகமாகவே உள்ளன. கடந்த இரண்டு ஆண்டுகளில், பல இளம் ஈரானியப் பெண்கள், அரசாங்கத்தின் அதிகாரத்திற்கு சவால் விடும் வகையில், பொது இடங்களில் தங்கள் ஹிஜாப்களை மீறி அகற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கனேடிய துணைப்பிரதமர் இராஜினாமா

அமெரிக்காவின் ஜனாதிபதியாக தேர்வாகியுள்ள டொனால்ட் டிரம்ப் சமீபத்தில் வெளியிட்டுள்ள அறிவிப்பில் கனடாவிலிருந்து அமெரிக்காவிற்குள் இறக்குமதியாகும் அனைத்து பொருட்களுக்கும் 25 சதவீதம் வரி விதிக்க திட்டமிட்டுள்ளதாக தெரிவித்தார்.



கனடாவிலிருந்து சுமார் 75 சதவீத ஏற்றுமதி வர்த்தகம் அமெரிக்காவுடன் மட்டுமே நடைபெறும் நிலையில் ட்ரம்பின் இந்த அறிவிப்பு கனடாவின் பொருளாதாரத்தில் பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன் காரணமாக கனடா நாட்டின் துணை பிரதமர் கிறிஸ்டியா பிரீலேண்ட் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார். இது தொடர்பாக பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவிற்கு அவர் எழுதிய கடிதத்தில் கனடா தற்போது ஒரு மிகப்பெரிய சவாலை சந்தித்து வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். கனடாவின் எதிர்காலம் தொடர்பான திட்டங்களில் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவிற்கும் தனக்கும் இடையே பல்வேறு கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டதாக அவர் தெரிவித்தார்.

மேலும் ஜஸ்டின் ட்ரூடோ தன்னை வேறு திணைக்களத்திற்கு மாற்ற வேண்டும் என விரும்பியதாக குறிப்பிட்ட அவர் ஜஸ்டின் ட்ரூடோவின் அமைச்சரவையில் இருந்து விலகுவதே நேர்மையான மற்றும் சாத்தியமான ஒரே வழி என முடிவு செய்ததாக தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நியூசிலாந்து இமாலய வெற்றி



ஹமில்டனில் நடந்த 3வது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து மற்றும் நியூசிலாந்து அணிகள் மோதின.

நியூசிலாந்து அணி நிர்ணயித்த 658 ஓட்ட இலக்கை நோக்கி களமிறங்கிய இங்கிலாந்து அணி , மூன்றாவது நாள் முடிவில் 18 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளை இழந்திருந்தது.

நேற்று 4வது நாள் ஆட்டத்தை தொடங்கிய இங்கிலாந்து அணியில் ஜேக்கப் பெத்தெல் மற்றும் ஜோ ரூட் இணைப்பாட்டம் அமைத்தனர்.

இந்த கூட்டணி 104 ஓட்டங்கள் குவித்த நிலையில் ஜோ ரூட் 54 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த ஹாரி புரூக் 1 ஓட்டத்தில் ரூர்க்கே ஓவரில் ஆட்டமிழந்தார்.

பின்னர் அரைசதம் அடித்த ஜேக்கப் பெத்தெல் (Jacob Bethell) 76 ஓட்டங்களில் சௌதீ ஓவரில் ஆட்டமிழந்தார்.

அதனைத் தொடர்ந்து சாண்ட்னர் ஓவரில் அடுத்தடுத்து விக்கெட்டுகள் சரிய, இங்கிலாந்து அணி 234 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. அதிரடியாக ஆடிய காஸ் அட்கின்சன் 41 பந்துகளில் 1 சிக்ஸர், 7 பவுண்டரிகளுடன் 43 ஓட்டங்கள் எடுத்தார். நியூசிலாந்து அணி 423 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இமாலய வெற்றி பெற்றது.

மிட்செல் சாண்ட்னர் 4 விக்கெட்டுகளும், ஹென்றி, சௌதீ தலா 2 விக்கெட்டுகளும் கைப்பற்றினர்.

தனது கடைசி டெஸ்டில் விளையாடிய டிம் சௌதீ (Tim Southee) வெற்றியுடன் விடைபெற்றபோது, சக வீரர்களும், ரசிகர்களும் அவருக்கு பிரியாவிடை அளித்தனர்.

# ஆசிய உதைப்பந்தாட்ட சம்மேளனத்தின் உத்தியோகபூர்வ இலச்சினை பெற்ற வில்லியம்ஸ்




மலேசியா கோலாலம்பூரில் 47 நாடுகளின் பங்கேற்புடன் நடைபெற்ற ஆசியக் கால்பந்து நடுவர் பயிற்சி நிறுவனத்தில், டி.எல். வில்லியம்ஸ் இலங்கைக்கான முதல் மற்றும் ஒரே ஆசிய உதைப்பந்தாட்ட அதிகாரப்பூர்வ இலச்சினையை பெற்றுக் கொண்டுள்ளார். இதன் மூலம், அடுத்த ஆண்டு முதல் ஆசிய உதைப்பந்தாட்ட சம்மேளனத்தினால் (ஏஎஃப்சி) நடத்தப்படும் போட்டிகளில் நடுவராகப் பங்கேற்கும் வாய்ப்பையும் பெற்றுள்ளார்.

நான்கு வருட நடுவருக்கான உயர் கற்கை நெறியை, அவர் 2021 ஆம் ஆண்டு முதல் ஆசிய உதைப்பந்தாட்ட சம்மேளனத்தின் நடுவர் பயிற்சி நிறுவனத்தில் கற்று வருகிறார், மேலும் அந்த கற்கையின் இறுதியில், அவர் ஆசிய உதைப்பந்தாட்ட சம்மேளனத்தின் நடுவர் எலைட் பிரிவில் சேரும் வாய்ப்பைப் பெற்றுக் கொள்வார்.

10 வருடங்களுக்கும் மேலாகத் தேசிய உதைபந்தாட்ட நடுவராக வில்லியம் ஸின் பயணமும், ஆசிய மட்ட நடுவராகச் சர்வதேசப் பயணமும் இலங்கை கால்பந்தாட்டத்திற்குப் பெருமை சேர்ப்பதாகும்.




# விளையாட்டு அமைச்சின் இரகசிய அறிக்கை எவ்வாறு கசிந்தது விளையாட்டுத்துறை அமைச்சர் ஆராய்வு

விளையாட்டு அமைச்சின் இரகசிய அறிக்கை ஒலிம்பிக் கமிட்டியின் ஒழுக்காற்று குழுவுக்கு எவ்வாறு சென்றது என்பது குறித்து முறையான விசாரணையை நடத்துவதற்கு விளையாட்டு அமைச்சர் சுனில் குமார கமகே தீர்மானித்துள்ளார். தேசிய ஒலிம்பிக்கில் குழுவில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை குறித்து ஆராய்ந்து தீர்வு காணப்பதற்காக விளையாட்டுத்துறை அமைச்சர் சுனில் குமார கமகே மற்றும் இலங்கை தேசிய ஒலிம்பிக் நிறைவேற்றுக் குழு உறுப்பினர்களுக்கிடையில் விளையாட்டு அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட சந்திப்பின் போதே மேற்கண்ட தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தேசிய ஒலிம்பிக் கமிட்டியில் ஊழல் மோசடிகள் இடம்பெற்றுள்ளதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்த கருத்து தொடர்பில் ஆராய்வதற்காக முன்னாள் விளை யாட்டுத் துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ மூவரடங்கிய விசாரணைக் குழு நியமிக்கப்பட்டது.

அக்குழுவால் மேற்கொள்ளப்பட்ட விசாரணை அறிக்கை விளையாட்டுத்துறை முன்னாள் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் (ரியர் அட்மிரல்) ஷெமல் பெர்னாண்டோவினால் இரகசிய ஆவணமாக விளையாட்டுத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோவிடம் கையளிக்கப்பட்டது. அந்த இரகசிய அறிக்கையை அடிப்படையாக கொண்டு தேசிய ஒலிம்பின் ஒழுக்காற்று குழுவால் ஒலிம்பிக் பொதுச் செயலாளரை பதவி நீக்கம் செய்யப்பட வேண்டுமென பரிந்துரைக்கப்பட்டது. மூவரடங்கிய விசாரணைக் குழுவின் அறிக்கை தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு 12



பரிந்துரைகளை வழங்க விளையாட்டுப் பணிப்பாளர் நாயகம் நடவடிக்கை எடுத்துள்ள நிலையில், தேசிய ஒலிம்பிக் ஒழுக்காற்று குழுவினால் அறிக்கையை பகிரங்கப்படுத்தியது தொடர்பில் அமைச்சர் கவனம் செலுத்தியுள்ளார்.

மூவரடங்கிய விசாரணைக் குழு அறிக்கை தொடர்பில் கவனம் செலுத்துவதுடன், அமைச்சுக்குச் சொந்தமான அறிக்கையை வேறொரு தரப்பினர் எவ்வாறு பெற்றனர் என்பது குறித்து தனித்தனியாக விசாரணை நடத்தப்படும் என அமைச்சர் தெரிவித்தார்.

# கம்மின்ஸ் டெஸ்ட் சாதனை



அவுஸ்திரேலிய கெப்டன் பாட் கம்மின்ஸ் டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிக விக்கெட்டுகள் எடுத்து சாதனை படைத்துள்ளார்.

பிரிஸ்பேனில் நடைபெற்றுவரும் பார்டர் – கவாஸ்கர் தொடரின் 3ஆவது டெஸ்ட்டில் இந்திய வீரர்களான ரிஷப் பந்த், ரோஹித் சர்மா, நிதீஷ்குமார் ரெட்டி, ரவீந்திர ஜடேஜா ஆகியோரது விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

மொத்தமாக 283 டெஸ்ட் விக்கெட்டுகள் எடுத்துள்ள கம்மின்ஸ் கெப்டனாக 119 விக்கெட்டுகள் எடுத்து, அதிக விக்கெட்டுகள் எடுத்த கெப்டன்கள் வரிசையில் மூன்றாமிடம் பிடித்துள்ளார்.

கெப்டனாக அதிக டெஸ்ட் விக்கெட்டுகள்

1. இம்ரான் கான் – 187 (பாகிஸ்தான்)
2. ரிச்சி பெனௌத் 138 (அவுஸ்திரேலியா)
3. பாட் கம்மின்ஸ் – 119 (அவுஸ்திரேலியா)
4. கேரிஃபீல்டு சோபர்ஸ் – 117 (மே.இ.தீவுகள்)
5. டேனியல் வெட்டோரி – 116 (நியூசிலாந்து)

# மேற்கிந்திய தீவுகள் தலைமை பயிற்சியாளராக டெரன் சமி




மேற்கிந்திய தீவுகள் அணியின் தலைமைப் பயிற்சியாளராக டெரன் சமி நியமிக்கப்பட்டுள்ளார். செயின்ட் வின்சென்ட்டில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் இயக்குநர் மைல்ஸ் பாஸ்கோம்பே இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார். 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் 1 ஆம் திகதி முதல் டெஸ்ட் அணிக்கு அதிகாரபூர்வமாக டெரன் சமி பொறுப்பேற்பார் என்றும், அதே நேரத்தில் டி20, ஒருநாள் அணிகளுக்கான பயிற்சியாளர் பொறுப்புகளை தொடர்ந்து வழிநடத்துவார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கிந்திய தீவுகள் அணியின் முன்னாள் கெப்டன் ஆண்ட்ரே கோலிக்கு பதிலாக டேரன் சமி தலைமைப் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

2012 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் மேற்கிந்தியத் தீவுகளுக்கு 2 டி20 உலகக் கோப்பைப் பட்டங்களைப் பெற்றுத் தந்த டெரன் சமி, 2023 ஆம் ஆண்டு டி20, ஒருநாள் அணிகளுக்கு பயிற்சியாளராக பொறுப்பேற்றப் பின்னர் மேற்கிந்திய தீவுகள் அணி சிறப்பான முன்னேற்றம் அடைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# அவுஸ்திரேலிய- இந்தியா 3ஆவது டெஸ்ட் ; பலோ ஓனை தவிர்த்தது இந்தியா





அவுஸ்திரேலிய– இந்திய அணிகளுக்கு இடையேயான 3ஆஇவது டெஸ்ட் போட்டியில் பலோ ஓனை தவிர்த்தது இந்தியா.

கபாவில் நடைபெற்று வரும் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 445 ஓட்டங்களுக்கு சகல விக்கட்டுகளையும் இழந்தது. இதனையடுத்து துடுப்பெடுத்தாடிய இந்திய அணியில் கேஎல் ராகுல், ஜடேஜா ஆகியோர் அரை சதம் அடித்தனர்.

ராகுல் 84 ஓட்டங்களிலும் ஜடேஜா 77 அவுஸ் ஆட்டமிழந்தனர். இதனையடுத்து இந்தியா பலோ ஓனை தவிர்க்க போராடியது. கடைசி விக்கெட்டுக்கு ஜோடி சேர்ந்த பும்ரா– ஆகாஷ் தீப் பொறுப்புடன் ஆடினர். இதனால் ஆட்டத்தில் பரபரப்பு ஏற்பட்டது. கடைசியில் பலோ ஓனை தவிர்க்க 4 ரன்கள் தேவைப்பட்டது. அப்போது ஆகாஷ் தீப், தேர்ட் மேன் திசையில் பந்தை அடித்து நான்கு ஓட்டங்களை பெற்றார்.

இந்த ஓட்டத்துடன் இந்திய அணி பலோ ஓனை தவிர்த்தது.

பலோ ஓனை தவிர்க்கவில்லை என்றால் ஆஸ்திரேலியா இந்தியாவை துடிப்பெடுத்தாட அழைத்திருக்கும். இதனால் ஒரு நாள் முடிவில் இந்தியாவின் 10 விக்கெட்டுகளை வீழ்த்துவது ஆஸ்திரேலியாவுக்கு பெரிய விடயமாக இருக்காது.

இந்தப் பத்திரிகை கொழும்பு – 08 கலாநிதி என்.எம்.பெரேரா மாவத்தை, இலக்கம் 42 இல் அமைந்துள்ள “அபே ஜனஹண்ட பப்ளிகேஷன் பிரைவேட் லிமிடெட்” நிறுவனத்தினரால் 2024 டிசம்பர் 18ம் திகதி புதன்கிழமை தயார் செய்யப்பட்டு, எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.